<u>இ.பொ.து.ந.க.எண்.எம்4/3057/2007</u>
<u>ஆணையாளர் அவர்களின் 09.10.2007 நாளிட்ட குறிப்பு</u>

<u>29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.522/2007 பொருள் எண்.40

<u>பணியமைப்பு</u>

திரு.டி.முனுசாமி, உதவி செயற் பொறியாளர், இயந்திரப் பொறியியல் துறை, (Doing duty in Bus Route Road) அவர்கள் 31.10.2007 பிற்பகல் முதல் வயது முதிர்வின் காரணமாக மாநகராட்சிப் பணியிலிருந்து ஓய்வு பெற உள்ளார். 11.06.2007 அன்று அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்ற இவர் வகிக்கும் பதவி மாநகராட்சி பணிப் பிரிவில் வகுப்பு இரண்டின் கீழ் வருவதால் இவரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதி அளிக்க மாமன்றத்தின் ஒப்புதல் தேவைப்படுகிறது.

இவர் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் அலுவலக முன்பணம் எதுவும் நிலுவையில் இல்லை இவர் மீது உள்ள தணிக்கைத் தடைகள் குறித்த விவரங்கள் கடந்த ஆண்டுகளுக்கு பெறப்பட்டுள்ளது. அதனை நீக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தனியர் மீது இத்துறையில் ஒழுங்கு நடவடிக்கை கோப்புகள் ஏதுவும் நிலுவையில் இல்லை. விழிப்பு அலுவலரின் 10.08.2007 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை 20.09.2007 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சியில் 32 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்துள்ளார். இவர் மீது உள்ள தணிக்கைத் தடைகள் சம்பந்தமான நிதி இழப்பீடு எதுவும் இருப்பது பின்னர் தெரியவரின் அவற்றிற்கு அவரை பொறுப்பாக்கி அவற்றை பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யும் நிபந்தனைக்குட்படுத்தி அன்னாரை 31.10.2007 அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்கலாம்.

எனவே, திரு.டி.முனுசாமி, உதவி செயற்பொறியாளர், இயந்திரப் பொறியியல் துறை அவர்கள் தணிக்கைத் தடைகள் சம்பந்தமான நிதி இழப்பீடு மற்றும் பிடித்தங்கள் ஏதும் பின்னர் தெரியவரின் இத்தொகையை பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி 31.10.2007 அன்று பிற்பகல் முதல் மாநகராட்சி பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதி அளிக்க நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி3/2538/2007**
**ஆணையாளர் அவர்களின் 14.09.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.523/2007 பொருள் எண்.41

**பணியமைப்பு – தன்விருப்ப ஓய்வு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் திரு.கே.சுப்பிரமணி, மருத்துவ அலுவலர் என்பவர் 31.07.2007 அன்று பிற்பகல் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற்றார். 20.11.1979 முதல் இவர் மருத்துவ அலுவலராக சென்னை மாநகராட்சியில் பணி நியமனம் செய்யப்பட்டு, அப்பதவியில் 20.11.1979 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டும் அதனை தொடர்ந்து அவருக்கு 20.11.1981 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் மீது இன்றைய தேதியில் துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் விழிப்பு அலுவலரின் 12.07.2007 தேதியிட்ட அறிக்கையில் இவர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லையென அறிக்கை சமர்ப்பித்துள்ளார். தனியர் மீது தணிக்கை தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை.

தனியர் தணிக்கைத்தடை காரணமாக சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு மற்றும் முன்பணம் பெற்று தீர்வு செய்யாமல் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு அவரை பொறுப்பாக்கி அவரது பணி பயன்களில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் தனியரை சு.து.ந.க.எண்.சி3/2538/2007 நாள்.31.07.2007 முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளித்து ஆணை வழங்கப்பட்டது. மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் மன்றத்தின் அனுமதியோடு மேற்படி அலுவலரை பணியிலிருந்து விடுவித்திருக்க வேண்டும். காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கப்பட்டு ஆணையரின் செயல்முறை ஆணையின்படி தனியர் 31.07.2007 வயது முதிர்வு ஓய்வில் செல்ல பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்த திரு.கே.சுப்பிரமணி என்பவரை 31.07.2007 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணை வழங்கியதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.524/2007 பொருள் எண்.42

**பணியமைப்பு– வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு. ஜி.லோகநாதன், உதவி செயற் பொறியாளர், மண்டலம்–1(மாற்று பணியிடம் மண்டலம்–5) என்பவர் 02.06.1975 முதல் ஓவர்சியராக மாநகராட்சி பணியில் சேர்ந்தார். பின்னர் 22.05.1979 முதல் இளநிலை பொறியாளராக பதவி உயர்வு பெற்றும், 18.05.2007 முதல் உதவி செயற் பொறியாளராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். திரு. ஜி.லோகநாதன் என்பவரின் உதவி செயற் பொறியாளராக பணி நியமனம் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உதவி செயற் பொறியாளரின் பிறந்த நாள் 19.08.1949ன்படி வயது முதிர்வு ஓய்வு நாள் 31.08.2007

திரு. ஜி.லோகநாதன் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை ஏதுமில்லை என 24.07.2007 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என விழிப்பு அலுவலர் அவர்களின் 24.08.2007 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் மீது மண்டலம்–1ல் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை

மேலும், அன்னார் மீது 01.08.1991 முதல் இன்றைய நாள்வரை பணியாற்றிய துறைகளில் தனியரை குறிப்பாக பொறுப்பாக்கும் தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை.

திரு. ஜி.லோகநாதன், உதவி செயற் பொறியாளர், மண்டலம்–1 அவர்களை நிதி சம்மந்தப்பட்ட தணிக்கைத் தடைகள், சென்னை மாநகராட்சிக்கு தொகை இழப்பீடு இருப்பது மற்றும் நீண்டகால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு அன்னாரை பொறுப்பாக்கி அன்னாரின் ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தைனைக்குட்பட்டும் அன்னாருக்கு உதவி செயற் பொறியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டதற்கு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும் மற்றும் மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டும் 31.08.2007 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்து ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை வழங்கப்பட்டது. எனவே, தனியர் 31.08.2007 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் சென்றமைக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.1
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.(ம)ந.க.எண்.எம்.1/3086/2006**

**ஆணையாளர் அவர்களின் 03.10.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.525/2007 பொருள் எண்.43

**முதுநிலை பூச்சியியலர் பதவி உயர்வு பின் தேதியிட்டு வழங்கியமைக்கு பின்னேற்பு**

திருமதி.கோ.கஞ்சனா லட்சுமி, முதுநிலை பூச்சியியலர் (ஓய்வு) என்பவர் முதுநிலை பூச்சியியலர் பதவி உயர்வு கோரி உயர்நீதி மன்றத்தில் (W.A.No.1436/02) வழக்கு தொடர்ந்தார். அவ்வழக்கின் 06.12.2006 நாளிட்ட தீர்ப்பின் படி தனக்கு 13.03.1992 முதல் முதுநிலை பூச்சியியலர் பதவி உயர்வு வழங்க கோரியுள்ளார்.

06.12.2006 நாளிட்ட உயர்நீதி மன்ற பெஞ்ச் தீர்ப்பில் வ.எண்.3 முதல் 7 வரையுள்ள பிரதிவாதிகளுக்கு விலக்களித்து முதுநிலை பூச்சியியலர் பதவி உயர்வு வழங்கியதற்க்கான எந்தவித கருத்தும் தெரிவிக்காத சூழ்நிலையில் பிரதிவாதிகளுக்கு பதவி உயர்வு வழங்கிய 13.03.1992 தேதியிலிருந்து வாதிக்கும் அனைத்து பயன்களும் வழங்க மாநகராட்சிக்கு உத்திரவு வழங்கப்பட்டது.

01.08.2007 தேதியிட்ட ஆணையரின் ஆணையில் W.A.No.1436/02 வழக்கில் 06.12.2006 நாளிட்ட தீர்ப்பின் படி திருமதி.கோ.காஞ்சனா லட்சுமி, முதுநிலை பூச்சியியலர் (ஓய்வு) அவர்களுக்கு 13.03.1992 முதல் முதுநிலை பூச்சியியலராக அடிப்படை விதி 27 துணை விதி (17)ன் கீழ் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள சீராய்வு மனுவில் வெளியாகும் தீர்ப்பினை எதிர் நோக்கியும், கருத்தியலாக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு 01.08.2007 தேதியிட்ட ஆணையரின் ஆணைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.8. ந.க.எண்.எச்2/3964/2002**
**ஆணையாளர் அவர்களின் 20.09.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.526/2007 பொருள் எண்.44

**பணியமைப்பு**

திரு.எஸ்.இராமலிங்கம், என்.எப்.சி.பி. தொழிலாளி, சுகாதாரத்துறை, மண்டலம்–8, அவர்கள் 21.12.1997 அன்று பணிக்காலத்தில் காலமானார். பணியாளரின் வாரிசுதாரர் திரு.ஆர்.சரவணன் அவர்கள் கருணை அடிப்படையில் பணி வழங்க கோரி ஐந்து ஆண்டுகள் கடந்து 28.05.2002 அன்று தனது 18வது வயதில் விண்ணப்பம் செய்துள்ளார்.

அரசுக் கடிதம் எண்.48795/க்யூ/98 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்.02.02.1999ன்படி குடும்பத்தில் பொருளீட்டும் நபராயிருந்த அரசு ஊழியர் இறந்துவிட்டால் அக்குடும்பம் வறிய சூழ்நிலையை சந்திக்ககூடாது என்ற நோக்கத்தில் தான் உடனடியாக அக்குடும்ப நபர் ஒருவருக்கு நேரடி நியமனத்தின் பொழுது முக்கிய விதிகளிலிருந்து விலக்களித்து பணி நியமனம் அளிக்கப்படுகிறது. ஆனால் இத்திட்டத்தின் நோக்கத்திற்கு மாறாக நியமன அலுவலர்கள் பலரும் அரசு ஊழியர்கள் இறந்த பல ஆண்டுகள் கழித்து பணி வழங்கி வந்தனர் இத்தகைய பணி நியமனங்கள் வழங்க கூடாது எனவும், பணி நியமனம் கோருவதற்கு கால நிர்ணயம் செய்து உரிய ஆணைகள் வழங்கப்படவேண்டுமென தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயம் தீர்ப்பின் அடிப்படையிலேயே தற்போது அரசு ஆணை எண்.120 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள். 26.06.1995ல் இத்திட்டத்தின் கீழ் பணிநியமனம் பெற அரசு ஊழியர் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள்ளாக அவரின் வாரிசு பணிநியமனம் சோரி விண்ணப்பம் அளிக்க வேண்டுமென ஆணைகள் வழங்கப்பட்டன. எனவே, பணியாளர்கள் இறந்த பல ஆண்டுகளுக்கு பின்னர் பணிநியமனம் கோரும் பணியாளர்களின் வாரிசுகளுக்கு பணிநியமனம் வழங்கத்தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.எஸ்.இராமலிங்கம், என்.எப்.சி.பி. தொழிலாளி அவர்களின் வாரிசுதாரும் மனைவியுமான திருமதி.ஆர்.சித்ரா என்பவருக்கு போதிய வயதிருந்தும் விண்ணப்பிக்காமல் அவரது மகன் திரு.ஆர்.சரவணன் அவர்கள் தனது தந்தையாரின் மரணத்தின் போது 13 வயது நிறைவடைந்த நிலையில் பள்ளியில் படித்துக்கொண்டு இருக்கும்போது வேலை வாய்ப்பு கோரி விண்ணப்பம் அளிக்கவில்லை. மேல்நிலைப்படிப்பை முடித்து தனது 18 வயதில் 28.05.2002 அன்று கருணை அடிப்படையில் பணி வழங்க கோரி கடிதம் கொடுத்துள்ளார்.

கருணை அடிப்படையில் பணி வழங்க கோரி காலம் கடந்து விண்ணப்பிபோருக்கு விதி விலக்கு அளிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளதால் அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.8.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.க.து.ந.க.எண்.சி1/5991/2003

ஆணையாளர் அவர்களின் 12.10.2007 நாளிட்ட குறிப்பு

## 29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.527/2007 பொருள் எண்.45

### பணியமைப்பு– பணிவரன் முறைப்படுத்த அனுமதி

சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.641/1978 நாள்.19.06.1978 மற்றும் எண்.489/79 நாள்.24.05.1979ஐ தொடர்ந்து சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை சு.க.து.ந.க.எண்.சி1/26432/78 நாள்.24.05.1979ன் படி அரசின் ஒப்புதலுக்குட்பட்டு தற்காலிகமாக டாக்டர்.டி.வி.ரமேஷ் என்பவர் மருத்துவ அலுவலராக சென்னை மாநகராட்சியில் 01.06.1979ல் பணியில் சேர்ந்தார்.

மருத்துவ அலுவலர் பதவியானது சென்னை மாநகராட்சியில் இரண்டாம் வகுப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 பிரிவு 85 (3) (பி)ன் படி வகுப்பு 2ன் கீழ் நியமனம் செய்யப்படும் அலுவலர்கள் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றத்தின் அனுமதியுடன் பணி நியமனம் செய்யப்பட வேண்டும்.

மேற்படி செயல்முறை ஆணையில் டாக்டர்.டி.வி.ரமேஷ் உட்பட 9 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இவ்வாணையில் டாக்டர்.டி.வி.ரமேஷ் என்பவர் வரிசை எண்.3ல் இடம் பெற்றுள்ளார். இவரைத் தவிர மற்று எட்டு நபர்கள் எவரும் பணியில் இல்லை என்பதனை 12.05.2006 நாளிட்ட சுற்றறிக்கையின் வாயிலாக ஊர்ஜிதம் செய்யப்பட்டது. சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.489/79 நாள்.24.05.1979ல் மருத்துவ அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்ட நிகழ்வுக்கு அரசின் பின்னேற்பு ஒப்புதல் பெறலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அரசின் பின்னேற்பு ஒப்புதல் பெறப்படவில்லை.

சென்னை மாநகராட்சி சட்ட விதியின்படி தனியர் பணி நியமனத்திற்கு அரசின் உறுதியாக்கம் பெறப்படாததால் அவரது பணியினை வரன்முறைப்படுத்தி தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க இயலவில்லை. எனவே அவரது பணி நியமனத்திற்கு அரசின் உறுதியாக்கம் பெற 03.07.2004 தேதியிட்டு அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

அரசு கடித எண்.13261 மா.ந.3/2005 – 14 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.18.01.2007ல் தனி அலுவலர் மன்றத் தீர்மான எண்.489/79 நாள்.24.05.1979ல் பணி நியமனம் குறித்தே அனுமதி பெறப்பட்டது என்றும் அம்மருத்துவ அலுவலரின் பணி நியமனம் அரசால் உறுதியாக்கம் பெறப்பட வேண்டும் என்பதால் இது குறித்து குறிப்பான மன்றத் தீர்மானத்தினை பெற்று அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

எனவே சிறப்பு அலுவலர் மன்றத் தீர்மான எண்.489/79 நாள்.24.05.1979ஐ தொடர்ந்து சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை சு.க.து.ந.க.எண்.சி1/26432/78 நாள்.24.05.1979ன்படி டாக்டர் டி.வி.ரமேஷ் என்பவர் தற்காலிகமாக மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டதற்கு அரசின் உறுதியாக்கம் பெற அரசிற்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத் தீர்மான எண்.198/2007 நாள்.28.05.2007ன் வாயிலாக மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு அரசிற்கு 08.06.2007 தேதியிட்டு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அரசாணை நிலை எண்.106 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.06.08.2007ல் டாக்டர்.டி.வி.ரமேஷ் என்பவர் சென்னை மாநகராட்சியில் 01.06.1979 முதல் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டதற்கு அரசால் உறுதியாக்கம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, டாக்டர்.டி.வி. ரமேஷ் என்பவரை சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக 01.06.1979 முதல் பணி நியமனம் செய்யப்பட்டதற்கு அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இவருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 01.06.1979 முதல் பணி வரன்முறைப்படுத்திட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.எண்.எப்.4/2024/1992**
**ஆணையாளர் அவர்களின் 11.09.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.528/2007 பொருள் எண்.46

**பணியமைப்பு – பணிவரன் முறைப்படுத்துதல்**

டாக்டர் திருமதி.ஜே.லாசியஸ் மருத்துவ அலுவலர் அவர்களுக்கு மன்ற தீர்மான எண்.3470/94 நாள்.11.10.1994ன்படி அரசின் உறுதியாகக்கத்திற்குட்பட்டு மண்டல அலுவலராக 17.03.1995 அன்று பதவி உயர்வு வழங்கப்பட்டது.

டாக்டர் திருமதி.ஜே.லாசியஸ், அவர்கள் தற்காலிக மண்டல அலுவலராக 17.03.1995 அன்று பணியமர்த்தப்பட்டதை அரசாணை (பத்தாண்டு) எண்.724 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை 29.12.2000ன்படி அரசு உறுதியாக்கம் வழங்கி ஆணையிட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட பணி விதிகளில் மண்டல அலுவலர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியரின் பணியினை வரன்முறைப்படுத்த மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே, டாக்டர் திருமதி.ஜே.லாசியஸ், மண்டல அலுவலர்(ஓய்வு 31.01.2007) மாவட்ட குடும்ப நலத்துறை அவர்கள் 17.03.1995 முதல் தற்காலிகமாக மண்டல அலுவலராக பணி அமர்த்தப்பட்டதை அரசாணை எண்.724 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை, நாள்.29.12.2000ல் உறுதியாக்கம் வழங்கியுள்ளதால் தனியர் மண்டல அலுவலர் பதவியில் பொறுப்பேற்ற நாளான 17.03.1995 முதல் பணிவரன் முறை செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**வ.து.ந.க.எண்.அ1/7530/07**

**ஆணையாளர் அவர்களின் 10.10.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.529/2007 பொருள் எண்.47

**பணியமைப்பு**

மன்றத் தீர்மான எண்.394/06, நாள்.31.08.2006ல் ஒப்புதலளிக்கப்பட்ட உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப் பட்டியலிருந்து பின்வரும் வரி மதிப்பீட்டாளர்கள் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு ரூ.8000–275–13500 என்ற ஊதிய விகிதத்தில் உதவி வருவாய் அலுவலர்களாக 06.09.2006 நாளிட்ட செயல்முறை ஆணைப்படி பதவி உயர்வு வழங்கப்பட்டது. இவர்களின் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள நாள் முதல் உதவி வருவாய் அலுவலர்களாக பொறுப்பேற்றுக் கொண்டனர்.

| | | |
|---|---|---|
| 1. | திரு.டி.எம்.எம்.கோவர்தன் | 11.09.2006 மு.ப. |
| 2. | திரு.டி.சண்முகம் | 07.09.2006 மு.ப |
| 3. | திரு.கே.ஆர்.சேகர் | “ “ |
| 4. | திரு.பி.ஜே.அலெக்சாண்டர் | “ “ |
| 5. | திரு.ஆர்.சேதுபாலன் | “ “ |
| 6 | திரு.ஆர்.சுப்பிரமணியன் | “ “ |
| 7. | திரு. மைக்கேல் ஆல்பரட் | “ “ |

அரசாணை (ப) எண்.360 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந–3) நாள்.01.08.2007ல் மேற்கண்ட பதவி உயர்விற்கு அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளது. இந்நிலையில் இவர்களது பணிகள் உதவி வருவாய் அலுவலர் பதவியில் பணி ஏற்ற நாள் முதல் வரன்முறைப்படுத்தப்பட வேண்டும். தனியர்கள் வகிக்கும் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் மன்றத்தின் ஒப்புதல் பெற்று பணிவரன் முறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, திருவாளர்கள்.1) திரு.டி.எம்.எம்.கோவர்தன் 2) திரு. டி.சண்முகம் 3) திரு.கே.ஆர்.சேகர் 4) திரு.பி.ஜே.அலெக்சாண்டர் 5) திரு.ஆர்.சேதுபாலன் 6) திரு.ஆர்.சுப்பிரமணியன் 7) திரு. மைக்கேல் ஆல்பரட் ஆகியோரின் பணிகளை இவர்கள் உதவி வருவாய் அலுவலர்களாகப் பொறுப்பேற்ற நாள் முதல் பணிவரன்முறைப்படுத்த நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ4.ந.க.எண்.அ6/4922 /2006
ஆணையாளர் அவர்களின் 24.08.2007 நாளிட்ட குறிப்பு

29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.530/2007 பொருள் எண். 48

பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

திரு.ஆர்.பழனி, மின்கம்பியாளர், நிலை–2 மின்துறை, மண்டலம்–4, அவர்கள் 01.05.2003 முதல் 27.06.2004 வரையிலும், 03.08.2004 முதல் 21.02.2007 வரை பணிக்கு வரவில்லை அவர்மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1983 துணை விதி 9(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. தனியரின் விளக்கம் ஏதுவும் பெறப்படவில்லை.

குற்றச்சாட்டு–1 01.05.2003 முதல் 27.06.2004 வரையிலும், மற்றும் 03.08.2004 முதல் இதுநாள் வரையிலும் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது.

குற்றச்சாட்டு–2 ஒரு களப்பணியாளர் என்ற முறையில் மேற்கண்ட செயலினால் தெருவிளக்கு பணிகள் பாதிக்க காரணமாய் இருந்தது.

குற்றச்சாட்டு–3 மேற்கண்ட செயலின் மூலம் பணியின் மீது கடமை உணர்வும் ஈடுபாடும் இல்லாதது சென்னை மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை விதி 20 மீறியுள்ளது.

தனியர் மேற்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு எந்த விதமான விளக்கமும் வழங்கவில்லை. எனவே மேற்கண்ட குற்றச்சாட்டுகள் மீது விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு, அவர் தம் விசாரணை அறிக்கையில் திரு.ஆர்.பழனி தன்மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மறுத்துக் கூறவில்லை நிர்வாகத்திற்கு தகவல் தராமல் முன்னறிவிப்பு கொடுக்காமல் விடுப்பில் சென்றது மாநகராட்சி பணிவிதிகளுக்கு முரணானது ஆகவே முதல் குற்றச்சாட்டு நிரூபணமாகிறது. இரண்டாவது, மூன்றாவது குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகிறது என தனது 03.08.2006 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

விசாரணை அலுவலரின் அறிக்கையை பணியாளருக்கு 28.08.2006ல் சார்வு செய்யப்பட்டது. தனியர் மேல் விளக்கம் இந்நாள் வரை வழங்கவில்லை. எனவே இப்பணியாளருக்கு வருடாந்தர ஊதிய உயர்வு 1 ஆண்டிற்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்ய ஆணையாளரின் இறுதி ஆணையில் ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனியரை மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டு 22.02.2007 முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

தனியர் பணிக்கு வராத காலமான 01.05.2003 முதல் 27.06.2004 வரையிலும் 03.08.2004 முதல் 21.02.2007 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டிற்கு மிகைப்படுவதால் அடிப்படை விதி 18(2)க்கு அரசின் தளர்வாணை பெற்று வரன்முறைப்படுத்தப் படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, திரு.ஆர்.பழனி, மின்கம்பியாளர் நிலை–2, அவர்கள் பணிக்கு வராத காலமான 01.05.2003 முதல் 27.06.2004 வரையிலும் மற்றும் 03.08.2004 முதல் 21.02.2007 வரையும் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததற்கு அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து வரன்முறைப்படுத்தி அரசாணை பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.4.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.5.ந.க.எண்.சி2/5686/03**

**ஆணையாளர் அவர்களின் 08.09.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.531/2007 பொருள் எண்.49

**பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.கே. வெங்கட்டைய்யா, துப்புரவு பணியாளர், கோட்டம்–75, பகுதி–15 மண்டலம்–5 அவர்கள் 16.6.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக குறிப்பாணை வழங்கப்பட்டது. விளக்கம் பெறப்படவில்லை.

எனவே, சென்னை மாநகராட்சி மூன்று மற்றும் நான்காம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(1)ன் கீழ் கீழ்கண்ட குற்றங்கள் சுமத்தி விளக்கம் கேட்கப்பட்டது.

குற்றச்சாட்டு:1 தாங்கள் 16.6.03 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்.

குற்றச்சாட்டு:2 மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணையை 8.7.03 அன்று பெற்றுக்கொண்டும் இது நாள் வரையில் விளக்கம் அளிக்காது உதாசீனப்படுத்தியுள்ளீர்.

குற்றச்சாட்டு:3 துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்.

மேற்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்ட பணியாளர் தனது 10.7.04 நாளிட்ட விளக்கக் கடிதத்தில் கீழ்கண்டவாறு விளக்கத்தை சமர்ப்பித்துள்ளார்.

குற்றச்சாட்டு 1க்கான விளக்கம் தன் தாயாருக்கு உடல் நிலை சரியில்லாததாலும், தன் உடல் நிலை சரியில்லாததாலும், 16.6.2003 முதல் பணிக்கு வர இயலவில்லை.

குற்றச்சாட்டு 2க்கான விளக்கம் மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணையை பெற்றுக் கொண்ட நான் எனது சொந்த ஊர் ஆந்திராவில் இருந்ததால் தன்னால் விளக்கமளிக்க இயலவில்லை. தான் எந்த வகையிலும் உதாசீனப்படுத்தவில்லை என தாழ்டையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குற்றச்சாட்டு 3க்கான விளக்கம் மேற்கண்ட காரணங்களால் தன்னால் விளக்கமளிக்க இயலவில்லை. தான் துப்புரவு பணிக்கு எந்த குந்தகமும் விளைவிக்கவில்லை எனவும் ,

தன்னை மன்னித்து தன் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்தும், மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ள கோரியுள்ளார். பணியாளர் அளித்த விளக்கத்தின் பேரிலும் ஆணையர் மற்றும் இணை ஆணையர்(பணிகள்) (பொறுப்பு) அவர்களின் ஆணையின்படியும் ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. அதன்படி பணியாளர் 19.9.04 அன்று பணியில் சேர்ந்து பணிபுரிகிறார்.

பணியாளர் விளக்கம் அளிக்காததால் சென்னை மாநகராட்சி மூன்று மற்றும் நான்காம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(1) ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது.

பணியாளர் பணிக்கு வராத காலம் ஓராண்டினை கடந்துள்ளதால் துணை விதி 9(1)ஐ விலக்கிக் கொண்டு துணை விதி 9(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்த குறிப்பாணை வழங்கப்பட்டது.

மேற்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு விளக்கமளிக்கவில்லை. தனியர் மீதுள்ள குற்றச்சாட்டுகளை விசாரண செய்ய திரு.எஸ். சண்முக பெருமாள், வழக்குரைஞர் அவர்கள் விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டு விசாரணை அறிக்கை பெறப்பட்டது.

விசாரணை அறிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிரூபணமானதாக அறிக்கை அளித்துள்ளார்.

விசாரணை அலுவலர் அறிக்கையின் மீது மேல் விளக்கம் கோரி குறிப்பாணை வழங்கப்பட்டது. அதனை பெற்ற பணியாளர் தனது விளக்கத்தில் தனக்கு உடல் நலம் இல்லாததால் 16.6.2003 முதல் அலுவலகத்திற்கு தகவல் கொடுக்க இயலாத காரணத்தினால் அவரது சொந்த ஊரான ஆந்திரா மாநிலத்தில் சிகிச்சை பெற்றதினால், தன்னால் அலுவலகத்திற்கு தகவல் கொடுக்க இயலவில்லை என்றும் குறிப்பாணையை 8.7.2003 அன்று பெற்றுக் கொண்டேன் என்றும், தனது உடல் நிலை பாதிக்கப்பட்டதால் தன்னால் பதில் அளிக்க இயலவில்லை என்றும் மேலும், உதாசீனப்படுத்தவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

<u>ம.அ.5.ந.க.எண்.சி2/5686/03</u>

எனவே, திரு.கே. வெங்கட்டைய்யா, துப்புரவு பணியாளர், கோட்டம்–75, பகுதி–15 மண்டலம்–5 அவர்கள் 16.6.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் பணியாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் அளிக்காதது, விசாரணை அலுவலர் அறிக்கை, அதற்கு பணியாளரின் விளக்கம் ஆகிய தொடர்புடைய ஆவணங்களின் அடிப்படையில், விசாரணை அலுவலர் அறிக்கை முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் கடுமையானவை. அவை கடுமையான தண்டனைக்குரியவை. எனினும் நிகழ்வு கருணையுடன் அணுகியதில் தனியரின் ஊதிய உயர்வினை ஓராண்டுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும். மேலும் பணிக்கு வராத காலமான 16–6–2003 முதல் 18–9–2004 வரையிலான காலம் ஓராண்டைக் கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2) ஐ தளர்த்த நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்பி அரசாணை பெற்று வரன்முறைப்படுத்தப்படும் என ஆணை வழங்கப்பட்டது.

எனவே, திரு.கே. வெங்கட்டைய்யா, துப்புரவு பணியாளர், கோட்டம்–75, பகுதி–15 மண்டலம்–5,அவர்கள் 16–6–2003 முதல் 18–9–2004 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டினை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18 (2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.5.ந.க.எண்.சி2/2486/2002

ஆணையாளர் அவர்களின் 08.09.2007 நாளிட்ட குறிப்பு

29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.532/2007 பொருள் எண்.50

பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

திரு.கே.மணவாளன், துப்புரவு பணியாளர், கோட்டம்–74, பகுதி–15, மண்டலம்–5, என்பவர், 15.11.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக உதவி செயற்பொறியாளர், பகுதி–15, அவர்களால் குறிப்பாணை வழங்கப்பட்டது. அதனை பெற்றுக் கொண்ட பணியாளர் தனது 10.05.2002 நாளிட்ட விளக்கத்தில் தனக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டதால் பணிக்கு வரவில்லை என்றும் தற்போது உடல் நிலை சரியாகிவிட்ட காரணத்தினால் தன்னை மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ள கோரியுள்ளார். பணியாளர் அளித்த விளக்கம் ஏற்புடையதாக இல்லை.

எனவே, சென்னை மாநகராட்சி பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் குற்றங்கள் சுமத்தி விளக்கம் கேட்கப்பட்டது.

குற்றச்சாட்டு:1 முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்.

குற்றச்சாட்டு:2 மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணைக்கு விளக்கமளிக்காது உதாசீனப் படுத்தியுள்ளீர்.

குற்றச்சாட்டு:3 துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்.

மேற்கண்ட குற்றங்களுக்காக குற்றக்குறிப்பாணை வழங்கப்பட்டது. விளக்கம் பெறப்பட்டது. பணியாளர் அளித்த விளக்கத்தின் பேரில் ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. அதன்படி பணியாளர் 10.09.2002 முதல் பணியில் சேர்ந்து பணிபுரிகிறார்.

மேற்கண்ட குற்றச்சாட்டினை முடிவுக்கு கொண்டு வர திருமதி.இராஜலட்சுமி, கணக்கு அலுவலர், மண்டலம்–5 அவர்கள் விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டார். அதன்படி விசாரணை அலுவலர் அவர்கள் தனியரை விசாரணை செய்து விசாரணை அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். அவற்றில் தனியர் மீது சுமத்தப்பட்டுள்ள மூன்று குற்றச்சாட்டுகளில் இரண்டு நிரூபணமாகிறது ஒன்று நிரூபணமாகவில்லை என அறிக்கையளித்துள்ளார்.

மேலும், தற்பொழுது திருத்தப்பட்ட விதிகளின்படி விசாரணை அறிக்கையில் நகல் பணியாளருக்கு சார்பு செய்யப்பட்டு கூடுதல் விளக்கம் பெறப்பட்டது. அதற்கான பட்டியல் தயார் செய்யப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் மீண்டும் 16.09.2002 அன்று முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்தற்காக மறுபடியும் உதவி செயற்பொறியாளர், பகுதி–15, அவர்களால் குறிப்பாணை வழங்கப்பட்டது. விளக்கம் பெறப்படவில்லை.

எனவே, சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம்நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு ) துணை விதி 9(1)ன் கீழ் குற்றங்கள் சுமத்தி மண்டல அலுவலகம் அளவில் விளக்கம் கேட்கப்பட்டது.

குற்றச்சாட்டு:1 முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்.

குற்றச்சாட்டு:2 மேலதிகாரிகள் வழங்கிய குறிப்பாணைக்கு விளக்கமளிக்காது உதாசீனப் படுத்தியுள்ளீர்.

குற்றச்சாட்டு:3 துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்.

மேற்கண்ட குற்றங்களுக்காக குற்றக்குறிப்பாணை வழங்கப்பட்டது அதனை பெற்றுக் கொண்ட பணியாளர் தனது 02.01.2003 நாளிட்ட விளக்கத்தில் தான் உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் 16.09.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வர இயலவில்லை என்றும் தனக்கு படிப்பறிவு இல்லாத காரணத்தினாலும் உறவினர் யாரும் பக்கத்தில் இல்லாத காரணத்தினாலும் முன்னறிவிப்பின்றி கொடுக்க இயலவில்லை என்றும், தன்னை இம்முறை மன்னித்து மீண்டும் பணியில் சேர ஆணை கோரியுள்ளார்.

01.02.2007 நாளிட்ட உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் குறிப்புரையின்படி பணியாளர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை துணை விதி 9(1)ன் கீழ் வழங்கப்பட்ட குற்றக்குறிப்பாணையை ரத்து செய்து துணை விதி 9(2)ன் கீழ் குற்றக்குறிப்பாணை வழங்கப்பட்டது. அதனை பெற்ற பணியாளர் தனது 28.03.2004 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு விளக்கத்தினை அளித்துள்ளார்.

குற்றச்சாட்டு:–1 16.09.2002 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது விதிகளை மீறின செயலாகும்.

<u>ம.அ.5.ந.க.எண்.சி2/2486/2002</u>

<u>விளக்கம்:</u> உடல் நலம் சரியில்லாத காரணத்தால் பணிக்கு வர இயலவில்லை என்னை இக்குற்றத்திற்கு மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

<u>குற்றச்சாட்டு:–2</u> 15.11.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு வரும் நிலையில் மீண்டும் பணிக்கு வராது உதாசீனப்படுத்தியுள்ளீர்.

<u>விளக்கம்:</u> உடல் நலம் திடீரென்று சரியில்லாமல் போனதால் இவ்வாறு பணிக்கு வர முடியாத நிலை ஏற்பட்டது. இனி வரும் காலங்களில் இவ்வாறு நடவாமல் பார்த்துக் கொள்கிறேன்.

<u>குற்றச்சாட்டு:–3</u> துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்துள்ளீர்.

<u>விளக்கம்:</u> நான் ஒரு பொழுதும் துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவிக்க நினைத்தது இல்லை என் உடல் நலம் சரியில்லாத காரணத்தால் இத்தவறு நேர்ந்தது. இக்குற்றத்திற்காக என்னை மன்னிக்கவும்

<u>குற்றச்சாட்டு:–4</u> அடிக்கடி சம்பளமில்லா விடுப்பாகவே பணி செய்துள்ளீர்கள். இதனால் தங்களுக்கு பணியின் மீது அக்கறையின்மையை காட்டுகிறது.

<u>விளக்கம்:</u> அவ்வாறு நடக்க ஒரு நாளும் நினைத்தது இல்லை.

மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கு அளிக்கப்பட்ட விளக்கத்தினை ஏற்று தன்னை இம்முறை மன்னித்து மீண்டும் பணியில் சேர அனுமதி வழங்கிட கோரினார்.

பணியாளர் அளித்த விளக்கத்தின் பேரிலும் உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் 30.06.2003 நாளிட்ட ஆணையின்படியும் ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. ஆனால் பணியாளருக்கு சார்பு செய்யும் முன்னர் விசாரணை அலுவலருக்கு கோப்பு மற்றும் பணிப்பதிவேட்டுடன் அனுப்பப்பட்டது.

உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் ஆணையின்படி திரு.பிரபாகர், உதவி செயற்பொறியாளர் அவர்கள் விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டார். அதன்படி பணியாளரை விசாரணை செய்த விசாரணை அலுவலர் தனது 03.08.2004 நாளிட்ட அறிக்கையில் பணியாளர் மீது சுமத்தப்பட்ட நான்கு குற்றச்சாட்டுகளில் மூன்று குற்றச்சாட்டு நிரூபணமாகிறது என அறிக்கையளித்துள்ளார். தற்பொழுதுள்ள விதிகளின்படி பணியாளருக்கு விசாரணை அலுவலர் அறிக்கையின் நகல் தனியருக்கு வழங்கி மேல் விளக்கம் கோரப்பட்டது. அதனை பெற்ற பணியாளர் தனது 27.10.2004 நாளிட்ட விளக்கத்தில் 16.09.2002 அன்று பணிக்கு வராதது தவறுதான் என்றும் அவருக்கு படிப்பு அறிவு இல்லை என்றும் வீட்டு பிரச்சனை காரணங்களாலும் உடல் நிலை சரியில்லாத காரணங்களாலும் அவரால் பணிக்கு வர முடியவில்லை என்றும், இனிமேல் தன் பணியில் மிகவும் கவனத்துடனும், கண்ணியத்துடனும் நடந்து கொண்டு விடுப்பு எடுக்காமல் அவர் பணிக்கு வருவேன் என்றும் அவரை மன்னித்து மீண்டும் பணியில் சேர்த்து கோள்ள கோரினார்.

பணியாளரை உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் ஆணையின்படி ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. அதன்படி பணியாளர் 07.11.2004 அன்று பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, திரு.கே.மணவாளன், துப்புரவு பணியாளர், கோட்டம்–74, அவர்கள் 15.11.2000 முதல் 09.09.2002 வரையும் மற்றும் 16.09.2002 முதல் 06.11.2004 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக இறுதி ஆணையாக தனியரின் ஊதிய உயர்வினை இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், பணிக்கு வராத காலம் ஓராண்டினை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசின் உரிய ஆணை பெற்று வரன் முறைப்படுத்தப்படும் என்று ஆணை வழங்கப்பட்டது.

எனவே, திரு. கே. மணவாளன், துப்புரவு பணியாளர், கோட்டம்–77, பகுதி–15 அவர்கள் 15.11.2000 முதல் 9.9.2002 வரையும் மற்றும் 16.9.2002 முதல் 6.11.2004 வரை இரு நிகழ்வுகளில் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டினை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.6.ந.க.எண்.எச்1/ 0456 /2000**
**ஆணையாளர் அவர்களின் 09.10.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.533/2007 பொருள் எண்.51

**பணியமைப்பு– பணிக்கு வராத காலம் வரண்முறைப்படுத்துதல்**

மண்டலம்–6, சுகாதாரத்துறையில் கோட்டம்–87ல் அடிப்படை சுகாதார ஊழியராக பணி செய்து வரும் திரு. சி. நாகராஜன் என்பவர் கடந்த 01.06.2000 முதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி பணிக்கு வராமல் தன்னிச்சையாக நின்று விட்ட குற்றத்திற்காக அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது. தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி, (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதிகள் 9(2) ன்படி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, விளக்கம் கோரப்பட்டது. தனியர் குற்றச்சாட்டுக் குறிப்பாணையை 09.01.2001 அன்று பெற்றுக் கொண்டு, 01.02.2001 தேதியிட்டு தனது விளக்கத்தை அளித்தார்.

திரு. சி. நாகராஜன், அடிப்படை சுகாதார ஊழியர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 என்பவர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை குறித்து நேர்முக விசாரணை நடத்த விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு, நேர்முக விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை அலுவலர் தனது அறிக்கையில் பணியாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் நிருபணமாகவில்லையென்று தெரிவித்தார். விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கை நகல் குற்ற பணியாளருக்கு சார்பு செய்யப்பட்டு, விசாரணை அறிக்கை மீதான மேல் விளக்கம் பெறப்பட்டது.

திரு. சி. நாகராஜன், அடிப்படை சுகாதார ஊழியர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 என்பவர் மீது 01.06.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை மீது இறுதி ஆணையாக குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டு, இனி வருங்காலத்தில் இதுபோன்று முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நின்று விடக்கூடாதென்று கடுமையாக எச்சரிக்கப்பட்டு, மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளவும், தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நின்று விட்ட 01.06.2000 முதல் மீண்டும் பணியில் சேரும் நாள் வரையிலான காலத்தை தகுதியுள்ள விடுப்பாக பாவித்து முறைப்படுத்தவும் ஆணையாளர் அவர்களின் 22.12.2002 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி உத்தரவிடப்பட்டது.

திரு. சி. நாகராஜன், அடிப்படை சுகாதார ஊழியர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 என்பவர் ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையை 06.01.2003 அன்று பெற்றுக் கொண்டு, 08.01.2003 அன்று மீண்டும் பணியில் சேர்ந்தார்.

இந்நிகழ்வில், தனியர் பணிக்கு வராத காலம் 01.06.2000 முதல் 07.01.2003 வரையிலும் ஓராண்டினைக் கடந்துள்ள நிலையில், அக்காலத்தை அடிப்படை விதி 18 ( 1 ) ஐ தளர்வு செய்து அரசாணை பெற்ற பின்னர் வரன்முறைப்படுத்த வேண்டும் என்பதால் தனியர் மேற்கண்டவாறு பணிக்கு வராத காலத்தை தகுதியுள்ள விடுப்பாக வரண்முறைப்படுத்தி ஏற்கனவே வழங்கப்பட்ட, 22–12–2002 நாளிட்ட செயல்முறை ஆணையில் தகுதியுள்ள விடுப்பு என்ற பகுதி மட்டும் ரத்து செய்யப்பட்டு, ஆணையாளர் அவர்களின் 13.09.2007 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி உத்தரவிடப்பட்டது. இவ்வாணை தனியருக்கு சார்வு செய்யப்பட்டது.

எனவே, திரு. சி. நாகராஜன், அடிப்படை சுகாதார பணியாளர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 என்பவர் 01.06.2000 முதல் 07.01.2003 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டுக்கு மேற்படுவதால், பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்தும் பொருட்டு, அடிப்படை விதி 18 (1) ஐ தளர்வு செய்ய வேண்டி அரசுக்கு செயற் குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக் குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.6.ந.க.எண்.சுது/எச்1/0109/1999
ஆணையாளர் அவர்களின் 13.09.2007 நாளிட்ட குறிப்பு

29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.534/2007 பொருள் எண்.52

பணியமைப்பு– பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்த அனுமதி

திரு.ஏ.ஒக்கைய்யா, ஆண் வார்டு உதவியாளர், சுகாதாரதுறை, மண்டலம்–6, என்பவர் 04.05.1999 முதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி பணிக்கு வராமல் தன்னிச்சையாக நின்று விட்ட குற்றத்திற்காக அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது. தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியாளர்கள், மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, விளக்கம் கோரப்பட்டது.

தனியர் குற்றச்சாட்டுக் குறிப்பாணையை பெற்றுக் கொண்டு 01.10.1999 தேதியிட்டு தனது விளக்கத்தை அளித்தார். அதில் தனியர் பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டி கேட்டுக் கொண்டதின்படி தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ள ஆணை வழங்கப்பட்டு, தனியர் 25.05.2000 அன்று மீண்டும் பணியில் சேர்ந்தார்.

தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை குறித்து நேர்முக விசாரணை நடத்த விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு, நேர்முக விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை அலுவலர் தனது அறிக்கையில் பணியாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில்–1, 2 மற்றும் 3 நிருபணமாகிறது என்றும், குற்றச்சாட்டுக்கள்–4 மற்றும் 5 நிருபணமாகவில்லையென்றும் தெரிவித்தார்.

விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கை நகல் குற்ற பணியாளருக்கு சார்பு செய்யப்பட்டு, ஒப்புகையும் பெறப்பட்டது குற்ற பணியாளர் விசாரணை அறிக்கை மீதான தனது மேல் விளக்கத்தை அளிக்கவில்லை.

தனியர் மீது 04.05.1999 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களின் தன்மை, தனியரது விளக்கம் மற்றும் விசாரணை அலுவலரின் அறிக்கை ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் நன்கு பரிசீலிக்கப்பட்டு, தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில், நிருபிக்கப்பட்ட முதல் மூன்று குற்றச்சாட்டுக்களுக்கு தண்டனையாக தனியரது ஊதிய உயர்வை திரண்ட பயனின்றி ஓராண்டு நிறுத்தம் செய்தும், தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தி அவருக்கு தகதியுள்ள விடுப்பாக பாவிக்கவும் உத்தரவு பிறப்பித்து இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 02.08.2004 தேதியிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டது. இதனால் தனியர் பணிக்கு வராத காலம் வரண்முறைப்படுத்த அரசின் தளர்வாணை வேண்டி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. பின்னர் இரண்டாவதாக தனியர் மீண்டும் 21.10.2000 முதல் 23.10.2001 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக வழங்கப்பட்ட ஆணையாளர் அவர்களின் 16.02.2004 தேதியிட்ட செயல்முறை ஆணையின்படி தனியரது ஊதிய உயர்வை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும் தனியர் 21.10.2000 முதல் 23.10.2001 வரை பணியில் இல்லாத காலம் ஓராண்டுக்கு மேற்படுவதால், அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு செயற் குறிப்பு அனுப்பப்பட்டது.

29.03.2006 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறையின் அரசு கடிதத்தில், தனியரின் பணிப்பதிவேட்டில் 04.05.1999 முதல் 24.05.2000 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்திற்கு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதியப்பட்டுள்ளது என்றும், அந்த நடவடிக்கையின் இறுதி விபரம் மற்றும் தளர்வாணை பெறப்பட்டிருப்பின், அதன் விவரம் மற்றும் இது குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் கருத்துக்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது. தணிக்கை துறையின் கருத்துரை கோரப்பட்டது. ஆனால் தணிக்கை துறை கருத்துரை ஏதும் அளிக்கவில்லை.

ஆணையாளர் அவர்களின் 28.06.2007 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, தனியர் 04.05.1999 முதல் 24.05.2000 வரை பணிக்கு வராத காலம் ஓராண்டினைக் கடந்துள்ள நிலையில் அக்காலத்தை அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து அரசாணை பெற்ற பின்னர் வரண்முறைப்படுத்த வேண்டும் என்பதால், 02.08.2004ல் தனியருக்கு தகுதியுள்ள விடுப்பாக வரண்முறைப்படுத்தி ஏற்கனவே வழங்கப்பட்ட 02.08.2004 நாளது செயல்முறை ஆணையில்

<u>ம.அ.6.ந.க.எண்.சுது/எச்1/0109/1999</u>

தகுதியுள்ள விடுப்பு என்ற பகுதியை மட்டும் ரத்து செய்து 02.07.2007 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டது. இவ்வாணை தனியருக்கு சார்வு செய்யப்பட்டது.

எனவே, திரு.ஏ.ஒக்கைய்யா, ஆண்வார்டு உதவியாளர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 என்பவர் 04.05.1999 முதல் 24.05.2000 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டுக்கு மேற்படுவதால், பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்தும் பொருட்டு, அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து அரசின் ஆணை பெற அரசுக்கு செயற் குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

**<u>ம.அ.8.ந.க.எண்.எச்2/1747/2001</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 26.09.2007 நாளிட்ட குறிப்பு</u>**

## 29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.535/2007 பொருள் எண்.53

**<u>பணியமைப்பு – பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்</u>**

திரு.எம்.நாராயணசாமி, ஏ.எம்.ஓ., தொழிலாளி, சுகாதாரத்துறை, மண்டலம்–8 அவர்கள் 03.07.1998 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதவருக்கு குறிப்பாணை வழங்கப்பட்டது. குறிப்பாணையை பெற்றுக்கொண்ட தனியர் தன்னுடைய கடிதத்தில் தான் கை,கால் வாத நோயால் பாதிக்கப்பட்டு இருப்பதால் பணிக்கு வர இயலவில்லை என்றும், தற்போது குணமடைந்து விட்டதாகவும், தன்னை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளுமாறு கோரியதின் பேரில், ஆணையரின் 19.03.1999 நாளிட்ட உத்தரவின்படி தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து 06.04.1999 முதல் மீண்டும் பணியில் சேர்ந்தார். தனியர் சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர் விதி 9(2)ன்படி கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது.

1) இவர் 03.07.1998 முதல் தன்னிச்சையாக பணிக்கு வராமல் இருந்துள்ளார்.

2) இவர் சென்னை மாநகராட்சி விதிகளை மீறி நடந்துள்ளார்.

3) இவரின் இச்செயல்களால் சென்னை மாநகராட்சி மலேரியா பணிகளுக்கு குந்தகம் விளைவித்துள்ளார்.

குறிப்பாணையை பெற்றுக் கொண்ட பணியாளர் பதில் ஏதும் சமர்பிக்கவில்லை, இவர் 16.07.2001 முதல் மீண்டும் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை. 03.07.1998 முதல் தன்னிச்சையாக பணிக்கு வராமல் இருந்ததற்கும் மீண்டும் 16.07.2001 முதல் பணிக்கு வராமல் இருந்ததற்கும் சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலை பணியாளர் விதி 9(2)ன்படி கீழ்க்காணும் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது.

1) இவர் 16.07.2001 முதல் தன்னிச்சையாக பணிக்கு வராமல் இருந்துள்ளார்.

2) இவரின் இச்செயல்கள் சென்னை மாநகராட்சி மலேரியா பணிகளுக்கு குந்தகம் விளைவித்துள்ளார்.

3) இவரின் இச்செய்கை சென்னை மாநகராட்சி விதிகளுக்கு மாறானதாகும்.

தனியர் விளக்கம் அளிக்காததின் பேரில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தனியர் 22.09.2002 நாளிட்ட கடிதத்தில் தான் 7 மாத காலமாக மூச்சுவிட முடியாமல் படுத்த படுக்கையாக இருந்ததாகவும், தன்னுடைய வீட்டில் உள்ளவர்களுக்கு படிப்பறிவு இல்லாததாலும் தக்க நேரத்தில் தகவல் தெரிவிக்க முடியாததற்கு வருத்தமடைகிறேன் என்றும், இனிமேல் பணியை செம்மையாக செய்வதாகவும், இம்முறை மன்னித்து 16.07.2001 முதல் 29.01.2002 வரை மருத்துவ சான்றிதழ்களுடன் சமர்ப்பித்ததாகவும், தன்னை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளும்படி கடிதம் கொடுத்துள்ளார்.

மருத்துவ சான்றிதழ்களை தாமதமாக சமர்ப்பித்ததன் பேரில் அவருடைய மருத்துவ சான்றதழ்களை சென்னை அரசு பொது மருத்துவமனை மருத்துவ குழுமத்திற்கு 16.04.2002 அன்று அனுப்பி அவரது உடல்நிலை குறித்து பரிசோதனை செய்து அறிக்கை அனுப்பக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

17.05.2002 நாளிட்ட மருத்துவகுழுவின் அறிக்கையில் 10.05.2002 முதல் தனியர் பணி ஏற்க தகுதியுடையவர் என சான்று அளிக்கப்பட்டது. உதவிஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் 06.08.2002 நாளிட்ட உத்தரவின்படி பணியாளர் மேல் தொடரப்பட்டு வரும் ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து மீண்டும் பணியில் சேர உத்தரவு பெறப்பட்டது. 14.08.2002 மீண்டும் பணிக்கு சேர அனுமதிக்கப்பட்டார்.

மீண்டும் தனியர் 22.07.2003 முதல் முன்னறிவிப்பின்றி தன்னிச்சையாக பணிக்கு வரவில்லை. இதுகுறித்து சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு ) துணை விதி 9(2)ன் கீழ் கீழ்க்காணும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, குறிப்பாணை வழங்கி விளக்கம் கோரப்பட்டது.

1) இவர் 22.07.2003 முதல் தன்னிச்சையாக பணிக்கு வராமல் இருந்துள்ளார்.

2) இவரின் இச்செயல்களால் சென்னை மாநகராட்சி மலேரியா பணிகளுக்கு குந்தகம் விளைவித்துள்ளார்.

3) இவரின் இச்செய்கை சென்னை மாநகராட்சி விதிகளுக்கு மாறானதாகும்.

4) இவர் ஏற்கனவே 16.07.2001 முதல் தன்னிச்சையாக பணிக்கு வராமல் இருந்துள்ளார்.

அதற்கான ஒழுங்கு நடவடிக்கை கோப்பு நிலுவையில் உள்ள நிலையில் இவர் மீண்டும் 22.07.2003 முதல் தன்னிச்சையாக பணிக்கு வராமல் இருந்துள்ளார்.

குற்றக்குறிப்பாணைக்கு தனியர் பதில் சமர்ப்பிக்கவில்லை.

இதற்கிடையில் 03.07.1998 முதல் 05.04.1999 வரை மற்றும் 16.07.2001 முதல் 13.08.2002 வரை பணிக்கு வராதது குறித்து தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி முடிவாக துணை ஆணையாளர் (சுகாதாரம்) அவர்களின் உத்தரவில் பலமுறை வாய்ப்பு கொடுத்தும் தனியர் மீண்டும் மீண்டும் பணிக்கு வராததால் இவரை பணியில் வைத்துக் கொள்வதால் சென்னை மாநகராட்சிக்கு எந்தவித ஆதாயமும் இல்லை என்பதால் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து நிரந்த பணி நீக்கம் செய்து 02.03.2004 நாளது ஆணை பெறப்பட்டதின்படி தனியரை பணிநீக்கம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

இத்தண்டனையை எதிர்த்து தனியர், தலைவர் " நியமனக்குழு" விற்கு சமர்ப்பிததுள்ள மேல்முறையீடு மனுவில் 03.07.1998 முதல் 05.04.1999 வரையிலும் 16.07.2001 முதல் 13.08.2002 வரையிலும் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் தன்னை நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், தான் தக்க விளக்கங்கள் கொடுத்தும் பயனின்றி போய்விட்டது என்றும், தற்சமயம் வேலை இல்லாமல் குடும்பம் நடத்தக் கஷ்டப்படுவதாகவும் தயவு செய்து மேற்படி மனுவை ஏற்று தன்னை மீண்டும் பணியில் சேர ஆணையிடும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொண்டார்.

15.06.2004 நாளது நியமனக்குழுக் கூட்ட தீர்மானத்தில் இம்மேல்முறையீட்டு மனு கவனமாக பரிசீலிக்கப்பட்டு தனியரை நிரந்தர பணிநீக்கம் செய்து வழங்கிய தண்டனையை மாற்றியமைத்து மீண்டும் பணியில் சேர அனுமதித்தும் திரண்ட பயனின்றி மூன்று ஆண்டுகளுக்கு தனியரின் ஊதிய உயர்வினை நிறுத்தம் செய்தும் பணிக்கு வராத காலத்தை விதிகளின்படி வரன்முறைப்படுத்தவும் நியமனக்குழு தீர்மானம் எண்.177/2004ல் நிறைவேற்றப்பட்டது. இதன்படி தனியர் 14.09.2004 முதல் கோட்டம்–126ல் பணிக்கு சேர்ந்து பணிபுரிந்து வந்தார்.

தனியர் 22.07.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வர விசாரணை அலுவலர் நியமனம் செய்து விசாரணையின்போது தனியர் தனக்கு உடல்நலமில்லாதது மூச்சுத் திணறல் ஏற்பட்டு விஷஜுரம் கண்டு பின்முதுகு வலி இருந்த காரணத்தால் பணிக்கு வரவில்லை எனவும் கூறி, தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். ஒழுங்கு நடவடிக்கையில் தனியர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிரூபணமாவதாக 15.06.2005 நாளது விசாரணை அலுவலர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இதன் தொடர்பாக தனியர் 22.07.2003 முதல் பணிக்கு வராதது குறித்து தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டதில், தனியரின் ஊதிய உயர்வு மூன்று ஆண்டுகளுக்கு நிறுத்தம் செய்யவும், தனியர் பணிக்கு வராத காலம் ஓராண்டினைக் கடந்துள்ளதால் அக்காலத்தை அரசின் தளர்வாணை பெற்ற பின்னர் வரன்முறைப்படுத்தவும் உத்தரவு பிறப்பித்து ஆணை வழங்கப்பட்டது.

இவ்வாறு தனியர் 03.07.1998 முதல் 05.04.1999 வரையிலும் 16.07.2001 முதல் 13.08.2002 வரையிலும் மற்றும் 22.07.2003 முதல் 12.09.2004 வரையிலும் ஆக மூன்று நிகழ்வுகளிலும் தனியர் பணிக்கு வராத காலம் ஓராண்டினைக் கடந்துள்ளதால் அக்காலங்களை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும்.

எனவே, திரு.எம்.நாராயணசாமி, ஏ.எம்.ஒ. தொழிலாளி, சுகாதாரத்துறை, மண்டலம்–8, என்பவர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத மேற்காணும் காலங்களை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து அரசின் தளர்வாணை பெற அரசுக்கு செயல்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.8.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.க.எண்.எப்.4/044/2007**
**ஆணையாளர் அவர்களின் 27.09.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.536/2007 பொருள் எண்.54

**பணியமைப்பு–தேர்வு நிலை ஊதியம் வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. வி.எழில்மணி, மருத்துவ அலுவலர் அவர்கள் பத்தாண்டு கால பணியை முடித்துள்ளார். அவருக்கு தேர்வுநிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர். திருமதி. வி.எழில்மணி, மருத்துவ அலுவலராக 11.11.1989 அன்று பணியமர்த்தப் பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.1460, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந3) நாள்: 06.12.1993ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தனியர் 03.03.1992 முதல் தகுதிக்காண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். இதற்கான பதிவுகள் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளன.

கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகை திட்டம் அவர்கள் டாக்டர். திருமதி. வி.எழில்மணி, மருத்துவ அலுவலர் 11.11.1999 முதல் தேர்வு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ.9925+300 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை கால சம்பளம் ரூ.9100–275–14050ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்.

டாக்டர். திருமதி. வி.எழில்மணி, மருத்துவ அலுவலர் மீது விழிப்பு குழுமத்தில் துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் 01 | மருத்துவ அலுவலரின் பெயர் 02 | முதன்முதலில் நியமன நாள்/ பணிவரன்முறை செய்த நாள் 03 | தகுதிக்காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் 04 | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் 05 | பத்தாண்டு பணியை முடித்த நாள் 06 |
|---|---|---|---|---|---|
| 01) | டாக்டர். திருமதி. வி.எழில்மணி, மருத்துவ அலுவலர் | 11.11.1989 | 03.03.1992 | இல்லை | 10.11.99 |

| பிந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் 07 | தண்டனை முற்றுப் பெற்ற நாள் 08 | தேர்வுநிலை ஊதியம் பெற தகுதியுடையவரா 09 | தேர்வுநிலை வழங்கப்பட வேண்டிய நாள் 10 |
|---|---|---|---|
| ஏதுமில்லை | – | ஆம் | 11.11.1999 |

டாக்டர். திருமதி. வி.எழில்மணி, மருத்துவ அலுவலருக்கு தேர்வுநிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர். திருமதி. வி.எழில்மணி, மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டு கால பணியினை 10.11.1999 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 11.11.1999 முதல் அடிப்படை ஊதியம் ரூ.9925+300 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை கால சம்பளமாக ரூ.9100–275–14050ல் நிர்ணயிக்க மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு முலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ9.சு.து.ந.க.எண்.அ1/ 1328 /2006
ஆணையாளர் அவர்களின் 11.09.2007 நாளிட்ட குறிப்பு

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.537/2007 பொருள் எண்.55

**பணியமைப்பு – தேர்வு நிலை வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் டாக்டர் எச்.பூமா, அவர்கள் மருத்துவ அலுவலராக 12.05.1995 அன்று பணி நியமனம் செய்யப்பட்டு தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார். தனியரின் பணிக்காலம் 12.05.1995 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு 10.11.1997 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தனியர் மருத்துவ சான்றின் பேரில் 11.02.1996 முதல் 25.06.1996 முடிய 136 நாட்களுக்கு ஊதியமில்லா விடுப்பாக மகப்பேறு விடுப்பு துய்த்துள்ளார். இவர் மீது துறை சார்ந்த மற்றும் விழிப்புத்துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கையோ விசாரணையோ ஏதும் நிலுவையில் இல்லை.

தனியருக்கு தேர்வு நிலை ஊதியம் வழங்குவது குறித்து தலைமை கணக்கு அலுவலர் (பொ) அவர்களின் கருத்துரு கோரப்பட்டதில் தனியர் 12.05.1995 முதல் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிவதால் தேர்வுநிலை வழங்கவும், தேர்வு நிலை ஊதியமான ரூபாய் 9100–275–14050 என்கிற ஊதிய விகிதத்தில் அடிப்படை ஊதியமாக ரூ.11025/– நிர்ணயம் செய்து 12.05.2005 முதல் வழங்கலாம் என கருத்துரு வழங்கியுள்ளார்.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் பிரிவு 2ன் கீழ் வருவதால் தேர்வுநிலை வழங்க மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும். எனவே, டாக்டர் எச்.பூமா, மருத்துவ அலுவலர், மண்டலம்–9, அவர்களுக்கு தேர்வு நிலை ஊதியமாக ரூபாய் 9100–275–14050 வழங்கி, அடிப்படை ஊதியமாக ரூ.11025/– நிர்ணயம் செய்து 12.05.2005 முதல் வழங்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.9.சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/ 3435/2007**
**ஆணையாளர் அவர்களின் 12.10.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.538/2007 பொருள் எண்.56

**பணியமைப்பு– சிறப்பு நிலை வழங்க அனுமதி**

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர் (திருமதி) டி.எஸ்.சாவித்திரி, மருத்துவ அலுவலர்,டாக்டர் ஆர்.கே.நகர் மண்டலம் அவர்கள் இருபதாண்டு பணியை முடித்துள்ளார். அவருக்கு சிறப்பு நிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகைத்திட்டம் அவர்கள் டாக்டர் (திருமதி), டி.எஸ்.சாவித்திரி மருத்துவ அலுவலர் 26.05.2006 முதல் சிறப்பு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ.11950+175பிபி +300 சிறப்பு ஊதியம் என சிறப்பு நிலை காலம் சம்பளம் ரூ.10000–325–15200–ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார்கள்.

டாக்டர் (திருமதி).டி.எஸ்.சாவித்திரி, மருத்துவ அலுவலராக 26.5.86 அன்று சென்னை மாநகராட்சியில் பணியமர்த்தப்பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.1279 , சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் நாள்.23.9.91–ன் படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. மருத்துவ அலுவலர் பதவி ஏற்ற நாள் முதல் பணி தகுதி காண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டு அன்னாரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தனியர் துறைத்தேர்வு அனைத்தும் தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.

டாக்டர் (திருமதி) டி.எஸ்.சாவித்திரி, மருத்துவ அலுவலர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் 01 | மருத்துவ அலுவலரின் பெயர் 02 | முதன் முதலில் நியமன நாள்/ பணிவரன்முறை செய்த நாள் 03 | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் 04 | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் 05 | இருப தாண்டு பணியை முடித்த நாள் 06 |
|---|---|---|---|---|---|
| 01 | டாக்டர்திருமதி. டி.எஸ்.சாவித்திரி, மருத்துவ அலுவலர் | 26.05.1986 | 26.05.1988 | இல்லை | 25.05.06 |

| பிந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் 07 | தண்டனை முற்று பெற்ற நாள் 08 | சிறப்பு நிலை ஊதியம் பெற தகுதியுடையவரா 09 | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் 10 |
|---|---|---|---|
| ஏதுமில்லை | –– | ஆம் | 26.05.2006 |

டாக்டர் (திருமதி) டி.எஸ்.சாவித்திரி, மருத்துவ அலுவலருக்கு சிறப்பு நிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர் (திருமதி) டி.எஸ்.சாவித்திரி, மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 25.05.2006 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 26.05.2006 முதல் அடிப்படை சம்பளம் ரூ.11950+175பிபி + 300 சிறப்பு ஊதியம் என சிறப்பு நிலை கால சம்பளமாக ரூ.10000–325–15200–ல் நிர்ணயிக்க மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>ம.அ5.ந.அ.ந.க.எண்.இ1/268/2006</u>
<u>ஆணையாளர் அவர்களின் 14.09.2007 நாளிட்ட குறிப்பு</u>

## <u>29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.539/2007 பொருள் எண்.57

<u>பணியமைப்பு– தமிழ் மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்</u>

திரு.ஜி.ஹரிபாபு, வயது முதிர்வு ஓய்வு பெற்ற மின்கம்பியாளர், (நிலை–2) மண்டலம்–5, அவர்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து 30.06.2006 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் சென்னை மாநகராட்சி பணியில் 14.07.1975 அன்று இணைந்துள்ளார். தனியர் தொடர்ந்து 31 ஆண்டுகள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளார்.

தனியரது தாய்மொழி தெலுங்கு என்பதால் 29.11.2006 நாளிட்ட துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை அவர்களது கடிதத்தில் தனியர் தமிழில் தேர்ச்சி பெறாதற்கு அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. 11.09.2006 நாளிட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை சார் செயலாளர் அவர்களது கடிதத்தில் தனியர் ஐந்து முறை தேர்வு எழுதியும் தேர்ச்சி பெறவில்லை என உறுதி செய்துள்ளார்.

எனவே, தனியர் தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி தகுதி பெறாமைக்கு சிறப்பினமாக தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசாணை பெற அரசிற்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ6.ந.க.எண்.அ1/6135/2006

ஆணையாளர் அவர்களின் 14.09.2007 நாளிட்ட குறிப்பு

29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.540/2007 பொருள் எண்.58

பணியமைப்பு– தமிழ் மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்

திரு.கே.என்.கோவிந்தராஜுலு, வயது முதிர்வு ஓய்வு பெற்ற துப்புரவு மேஸ்திரி, மண்டலம்–6, அவர்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து 31.01.2007 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் சென்னை மாநகராட்சியில் 24.10.1983 அன்று இணைந்துள்ளார். தனியர் தொடர்ந்து 23 ஆண்டுகள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளார்.

தனியரது தாய்மொழி தெலுங்கு என்பதால் 12.02.2007 நாளிட்ட துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை அவர்களது கடிதத்தில் தனியர் தமிழில் தேர்ச்சி பெறாததற்கு அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. 11.09.2006 நாளிட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை சார் செயலாளர் அவர்களது கடிதத்தில் தனியர் மூன்று முறை தேர்வு எழுதியும் தேர்ச்சி பெறவில்லை என உறுதி செய்துள்ளார்.

எனவே, தனியர் தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி தகுதி பெறாமைக்கு சிறப்பினமாக தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசாணை பெற அரசிற்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.541/2007 பொருள் எண்.59

**பணியமைப்பு– தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து அனுமதி**

திரு.டி.திருப்பால் என்பவர், மண்டலம்–6ல் துப்புரவு மேஸ்திரியாக பணிபுரிந்து வந்து, கடந்த 25.08.2005 அன்று பணிக்காலத்தில் காலமானார். அன்னாரது வாரிசுதாரர்களுக்கு இறப்புக்கால பயன்களை வழங்க தணிக்கைச் சான்று வேண்டி ஓய்வூதியப் பிரேரணை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டது.

துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்களின் 05.02.2007 நாளிட்ட தணிக்கைச் சான்றில், தனியர் தமிழ்மொழி தேர்ச்சி பெறாததால், உரிய அரசின் பின்னேற்பு பெறப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது.

காலஞ்சென்ற திரு.டி.திருப்பால், துப்புரவு மேஸ்திரியின் தாய் மொழி “ தெலுங்கு “ ஆகும் ஆணையாளர் அவர்களின் 16.04.2004 நாளிட்ட சுற்றறிக்கையின்படி தமிழ் மொழியில் தேர்ச்சி பெறவில்லையெனில், வருடாந்திர ஊதிய உயர்வு, பணப்பயன் மற்றும் பணி உயர்வு ஆகிய கோரிக்கைகளை பரிசீலிக்க இயலாது என தனியருக்கு 11.06.2002 மற்றும் 28.04.2004 தேதிகளிட்ட குறிப்பாணைகள் மூலம் தெளிவாக அறிவுறுத்தப்பட்டது. தனியருக்கு 01.07.2003க்கு பின்னர் வருடாந்திர ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்படாமல் நிறுத்தப்பட்டன.

தனியர் அவர்களின் குடும்ப சூழ்நிலையை கருதி, அன்னாரது மனைவிக்கு ஆணையாளர் அவர்களின் 07.05.2007 நாளிட்ட உத்தரவின்படி, தற்காலிக குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் ரூ.1,275/– மட்டும் வழங்க ஆணையிடப்பட்டது.

தனியரின் இரண்டாம் மொழித் தேர்வாண தமிழ்மொழியில் தேர்ச்சி பெற வேண்டுமென 11.06.2002 மற்றும் 28.04.2004 தேதிகளிட்ட இவ்வலுவலக குறிப்பாணைகள் வாயிலாக அறிவுறுத்தப்பட்டும், தனியர் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற முயற்சிக்கவில்லை.

அரசாணை எண்.1120, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள்.30.10.1984ன்படி சிறப்பு மற்றும் துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்கு பெற, குறிப்பிட்ட பணியாளர் 53 வயதை பூர்த்தி செய்திருக்க வேண்டுமென்றும், குறைந்தது ஐந்து முறையேனும் தேர்வுகளில் தேர்ச்சி பெற அமர்ந்து முயற்சித்திருக்க வேண்டுமென்றும், அதற்கு அத்தாட்சியாக பணிப்பதிவேட்டில் பதிவுகள் இருக்க வேண்டுமென்றும், அல்லது தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுக்கள் வைத்து அனுப்பப்பட வேண்டுமென்றும், அச்சலுகையை அடையத் தக்க அளவிற்கு அவருடைய பணிக்குறிப்புகள் மனநிறைவு அளிப்பதாக இருக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தனியர் இரண்டாம் மொழித் தேர்வான தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி பெற முயற்சிக்காத நிலையில், அன்னார் 25.08.2005 அன்று காலமாகி விட்டார். தனியர் பணிபுரிந்த வரையில் அவரது பணி திருப்திகரமாக இருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே, 25.08.2005 அன்று பணிக்காலத்தில் காலமான திரு.டி.திருப்பால், துப்புரவு மேஸ்திரி அவர்களின் மனைவிக்கு முழு ஓய்வூதியப் பயன்களை அனுமதிக்கும் பொருட்டு, அன்னார் இரண்டாம் மொழியான தமிழ்மொழியில் தேர்ச்சி பெறாததற்கு அரசின் தளர்வாணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி4/7522/2007**
**ஆணையரின் 21.9.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.542/2007 பொருள் எண்.60

**பணியமைப்பு**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத் துறையில் பொது பகுப்பாய்வுக் கூடத்தில் பணிபுரிந்த திரு.எம்.பாலகிருஷ்ணன், பொதுபகுப்பாய்வாளர் மற்றும் இதர பகுப்பாய்வாளர்கள் அரசு பொது சுகாதாரத் துறையில் பொது பகுப்பாய்வாளருக்கு இணையாக தங்களது ஊதியத்தினை 1.6.88 முதல் திருத்தம் செய்ய கோரி உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மனு எண்.4148/1997 தாக்கல் செய்திருந்தனர்.

உயர்நீதி மன்றம் நீதிப்பேராணை மனு எண் 4148/1997 ல் 29.6.2001 தேதியிட்ட உத்திரவில் அரசு ஒரு நபர் கமிஷன் ஏற்படுத்தி மனுதாரர்களின் கோரிக்கையினை பரிசீலனை செய்து ஊதிய விகிதம் திருத்தம் செய்வதற்கு வழி வகைகள் இருப்பின் உயர்நீதி மன்ற உத்திரவு பெறப்பட்ட ஆறு மாத காலத்திற்குள் முன்னதாக தேதியிட்டு ஊதிய விகிதம் திருத்தம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. மனு தாரர்கள் தாக்கல் செய்த நீதிப் பேராணை மனு மேல்முறையீடு எண்.1709/2001 ல் உயர்நீதி மன்றம் 10.9.2001 தேதிய உத்திரவில் நீதிப்பேராணை மனு எண் 4148/1997 உயர்நீதி மன்ற உத்திரவினை உறுதி செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் பொது பகுப்பாய்வு துறையில் பணிபுரியும் பொது பகுப்பாய்வாளர்கள், முதுநிலை பகுப்பாய்வாளர்கள் மற்றும் இளநிலை பகுப்பாய்வாளர்கள் ஆகியோருக்கு கீழ்கண்டவாறு 1.6.88 முன் தேதியிட்டு ஊதிய விகிதம் திருத்தம் செய்து, தேர்வுநிலை, சிறப்பு நிலை வழங்கலாம் என்றும் அரசாணை எம்.எஸ்.296 நிதி (ஊதியக்குழு) துறை நாள் 29.6.07 ல் ஆணை வெளியிட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | சென்னை மாநகராட்சியில் தற்போதைய ஊதிய விகிதம் 1.6.88 முதல் | 1.6.88முதல் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் | 1.1.1996முதல் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பொது பகுப்பாய்வாளர் | ரூ.2200 – 4000 | ரூ.3000 – 4500 | ரூ.10000 – 15200 |
| 2 | முதுநிலை பகுப்பாய்வாளர் | ரூ.1600 – 2660 | ரூ.2200 – 4000 | ரூ.8000 – 13500 |
| 3 | இளநிலை பகுப்பாய்வாளர் | ரூ1350 – 2200 | ரூ.1600 – 2660 | ரூ.5900 – 9900 |

எனவே, அரசாணை எண். எம்.எஸ்.296 (ஊதியக்குழு) துறை நாள்.29.6.07ல் சென்னை மாநகராட்சி, பொது பகுப்பாய்வு கூட பொது பகுப்பாய்வாளர், முதுநிலை பகுபாய்வாளர் மற்றும் இளநிலை பகுபாய்வாளர் ஆகியயோர்க்கு திருத்தியமைக்ககப்பட்டுள்ள ஊதிய விகிதத்தினை 1.6.1988 முதல் அமல்படுத்தவதற்கும் அதற்கான பணபயன் அரசானை வெளியிடப்பட்ட 29.6.07 முதல் வழங்கவும் அனுமதி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"19.10.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு(வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.159/07 நாள். 19.10.2007 –ன் படிஅரசாணை எண். எம்.எஸ்.296 (ஊதியக்குழு) துறை நாள். 29.6.07–ஐ அமுல்படுத்துவதற்கும் அதற்கான பணப்பயன் அரசாணை வெளியிடப்பட்ட 29.6.07 முதல் வழங்கவும் நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**தி.க.மே.து.ந.க.எண்.அ6/1554/2007**
**ஆணையாளர் அவர்களின் 12.10.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.543/2007 பொருள் எண்.61

**பணியமைப்பு– கடவுச்சீட்டு பெற தடையின்மை சான்று வழங்க அனுமதி**

திரு.பா.சிவசங்கர், உதவி செயற்பொறியாளர், அவர்கள் தனது 26.09.2007 நாளிட்ட கடிதத்தில் டிசம்பர் மாதம் 2007 ல் அமெரிக்காவில் இருக்கும் தனது சகோதரரை பார்க்க செல்ல வேண்டி இருப்பதால், அதற்காக கடவுச்சீட்டு பெறுவதற்கு தடையின்மைச்சான்று அளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு. பா.சிவசங்கர், அவர்கள் சென்னை மாநகராட்சியில் 30.06.1993 முற்பகல் முதல் உதவி பொறியாளராக பணியமர்த்தப்பட்டு பின்பு உதவி செயற்பொறியாளராக 23.03.2005 முதல் பதவி உயர்வு பெற்று தற்போது திடக்கழிவு மேலாண்மைத்துறையில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். இவரது பணி உதவி பொறியாளர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தப்பட்டும், தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டும் உள்ளது. இவர் 30.04.2024 அன்று வயது முதிர்வு ஒய்வு பெற உள்ளார். மேலும், தனியர் மீது சென்னை மாநகராட்சி விழிப்புக் குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என விழிப்பு அலுவலர் அவர்களது 12.07.2007 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. லஞ்ச ஒழிப்பு மற்றும் விழிப்புத்துறையிலும் (DV & AC), பாதுகாப்பு பிரிவு காவல் துறையிலும் (SB-CID) தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டது. இவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதுமில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

அரசு பணியாளர்கள் அயல்நாடுபயணம் மேற்கொள்ள அனுமதி வழங்குவதற்கு கடைப்பிடித்தொழுகும் நிபந்தனைகளை கடைப்பிடித்து இவருக்கு வெளிநாடு செல்வதற்கு கடவுச்சீட்டு பெறுவதற்கு தடையின்மைச் சான்று கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம்.

1) வெளிநாடு செல்ல இருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும்பொழுது வேலை வாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்து கொள்ளக்கூடாது.
2) வெளிநாட்டில் தங்கும்பொழுது வியாபாரத்திலோ அல்லது பணிநியமனத்திற்காகவோ இதுபோன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.
3) வெளிநாடு செல்லும் பயணச்செலவு உட்பட எந்தவிதமான செலவுகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
4) இவர் வெளிநாட்டில் இருக்கும்பொழுது சென்னை மாநகராட்சியில் பணியினைத் துறக்க விண்ணப்பிக்கக்கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்படமாட்டாது.
5) வெளிநாடு செல்வதற்குமுன்பு தனியருக்கு தகுதியுள்ள விடுப்புகள் துய்க்க அனுமதி வேண்டி விண்ணப்பித்து அவ்விடுப்பு அனுமதி அளித்த பிறகே அவர் வெளிநாடு செல்ல வேண்டும்.
6) வழங்கப்படும் தடையின்மைச்சான்றிதழ் மூலம் பெற்ற கடவுச்சீட்டை பயன்படுத்தி ஆணையர் அவர்களது முன் அனுமதி இன்றி வெளிநாடு பயணத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளுடன் திரு.பா.சிவசங்கர், உதவி செயற்பொறியாளர், திடக்கழிவு மேலாண்மைத்துறை, சென்னை மாநகராட்சி அவர்களுக்கு அமெரிக்கா செல்ல கடவுச்சீட்டு பெறுவதற்கு தடையின்மைச் சான்று வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந.(ம)ம.கு.ந.க.எண்.எப்.4/0472/2007
ஆணையாளர் அவர்களின் 27.09.2007 நாளிட்ட குறிப்பு

## 29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.544/2007 பொருள் எண்.62

### பணியமைப்பு – வெளிநாடு செல்ல தடையின்மை சான்று வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறை, சாந்தோம் மண்டலத்தில், மண்டல அலுவலராக பணிபுரியும் டாக்டர் திருமதி.பி.சாருமதி, என்பவர் தன் மகனைக் காண்பதற்காக அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்று அளிக்குமாறும் பயணம் செல்வதற்கு 01.05.2007 முதல் 30.07.2007 வரை ஈட்டிய விடுப்பு அளிக்குமாறு கோரியிருந்தார்.

டாக்டர். திருமதி.பி.சாருமதி, மண்டல அலுவலர் என்பவர் சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் 31.05.1979 முதல் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறார். தனியரின் பணியினை அரசாணை எண்.2193, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள்: 02.11.1982ல் அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளதை தொடர்ந்து 31.05.1979 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. மேலும், தனியர் 01.06.1981 முதல் தகுதிக்காண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். (செயல்முறை ஆணை எண்.சு.து.பி1/761/81, நாள்: 25.02.1982) பின்னர் 16.12.2004 முதல் மண்டல அலுவலராக பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார். (செயல்முறை ஆணை எண்.மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/553/2001, நாள்:28.09.2006) இத்துறையில் தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி, விழிப்பு பணி அலுவலகத்திலிருந்து அன்னார் மீது விசாரணை எதுவும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

காவல்துறை கண்காணிப்பாளர் பாதுகாப்பு பிரிவு மத்திய குற்றப்புலனாய்வுத்துறை, சென்னை–2 அவர்களிடமிருந்து அன்னார் மீது விசாரணை எதுவும் நிலுவையில் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது. அரசு பணியாளர்கள் அயல்நாடு பயணம் மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்குவதற்கு கடைபிடித்தொழுகும் நிபந்தனைகளை கடைபிடித்து இவருக்கு தடையின்மை சான்றிதழ் வழங்கலாம் என பரிந்துரைக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மாவட்ட குடும்ப நலத்துறையில் மண்டல மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியர் வெளிநாடு பயணம் செல்வதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். மன்றத்தின் அனுமதி பெற போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு அயல்நாடு பயணம் மேற்கொள்ள ஆணையரின் ஆணை பின்வரும் நிபந்தனைக்குட்பட்டும் 13.04.2007 தேதியிட்ட ஆணை வழங்கப்பட்டது.

(அரசாணை எண்.288, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள்: 04.12.1997ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி)

01) வெளிநாடு செல்லவிருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும்போது வேலைவாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்துகொள்ள கூடாது.

02) வெளிநாட்டில் தங்கும்போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இதுபோன்ற சம்மந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடகூடாது.

03) வெளிநாடு செல்லும் பயணச்செலவு உட்பட எந்தவிதமான செலவுகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.

04) அவர் வெளிநாட்டில் இருக்கும்போது சென்னை மாநகராட்சியின் பணியை துறக்க விண்ணப்பிக்க கூடாது. மீறி அவர் துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்பட மாட்டாது.

05) வெளிநாடு செல்வதற்கு முன்பு தனியருக்கு தகுதியுள்ள விடுப்புகள் துய்க்க அனுமதி வேண்டி விண்ணப்பித்து அவ்விடுப்பு அனுமதி அளித்தபிறகே அவர் வெளிநாடு செல்ல வேண்டும்.

06) வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் மூலம் பெற்ற கடவுச்சீட்டை பயன்படுத்தி ஆணையர் அவர்களின் முன்னனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

07) இவ்வாணை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்கு மட்டும் செல்லத்தக்கது.

டாக்டர். திருமதி.பி.சாருமதி அவர்கள் அமெரிக்கா நாட்டிற்கு பயணம் சென்று 30.06.2007 அன்று பணியில் சேர்ந்துள்ளார்.

மேலும், தனியரின் பயணச்செலவினை அவரது கணவர் ஏற்றுக்கொண்டதாக தெரிவித்துள்ளார். அதற்குரிய இசைவு கடிதம் பெறப்பட்டுள்ளது.

மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு மேற்படி நிபந்தனைகளுடன் இவ்வலுவலர் அமெரிக்கா ஐக்கிய நாட்டிற்கு பயணம் செல்வதற்கு மட்டுமே பொருந்தும் என தெரிவித்து ஆணையர் அவர்களின் 19.04.2007 தேதியிட்ட செயல்முறை ஆணையின்படி தடையின்மை சான்றிதழ் வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.8.மி.து.ந.க.எண்.246/2007
ஆணையரின் 19.10.2007 நாளிட்ட குறிப்பு

29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.545/2007 பொருள் எண். 63

பணியமைப்பு

மண்டலம்–8, மின்துறையில் 89 நாட்கள் அடிப்படையில் பணிபுரிந்து, பணியிலிருந்து நிறுத்தம் செய்யப்பட்டவர்களால் பல்வேறு நிலைகளில் தொடரப்பட்ட வழக்குகள் மற்றும் தற்போது உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கு Cont No.971 to 975 of 2005 வழக்கு தொடர்பாக கீழ்க்கண்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சி, மண்டலம்–8ல் அடங்கிய அனைத்து தெருக்களிலும் உள்ள குழல் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றும் பணிக்கு மண்டல அலுவலர்–8 அவர்கள் மூலமாக அளவிலேயே நேரடியாக 64 தற்காலிக தொழிலாளர்கள் 89 நாட்கள் அடிப்படையில் 1996ஆம் ஆண்டு இறுதியில் பல்வேறு தேதிகளில் பணிபுரிய அனுமதித்து வேலை செய்தனர். இவர்கள் மின்சாரத் துறையில் தயாரிக்கப்பட்ட தற்காலிக பணியாளர் வரிசைப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. இந்நிலையில் மண்டலம்–8ல் அடங்கிய அனைத்து தெருக்களிலும் ஃபிட்டிங் மாற்றும் பணி முடிந்து பணிப்பளுக் குறைந்தவுடன் மேற்கண்ட 64 நபர்களையும் 18.03.1999 நாள் முதல் நிறுத்தப்பட்டு மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. மின்சாரத் துறையின் மூலமாக பணியமர்வு செய்யப்பட்ட 400 தற்காலிக தொழிலாளர்களுக்கு தொடர்ந்து பணிபுரிய அனுமதித்து, பின்பு 23.02.2006 அன்று முதல் அரசாணைப்படி பணி நிரந்தரம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில் மண்டலம்–8லிருந்து நிறுத்தப்பட்ட 64 நபர்களில் கீழ்க்கண்ட நபர்கள் நீதிமன்றத்தை அணுகி மீண்டும் பணி வேண்டி வழக்கு தொடரப்பட்ட விவரங்கள் தெரியப்படுத்தப்படுகிறது.

1. திரு.பி.கிருஷ்ணமூர்த்தி என்பவர் தொழிலாளர் நல அலுவலர் குறளகம், சென்னை–108ல் மீண்டும் பணி வேண்டி மனு செய்யப்பட்டு பின்பு சமரச முறிவு ஏற்பட்டது.
2. திரு.வடிவேலு மற்றும் 25 நபர்கள் உயர்நீதி மன்றத்தில் நீதி பேராணை மனு எண்.5125/2000 வழக்கு தொடரப்பட்டு மீண்டும் பணி வேண்டி உத்தரவிடுமாறு கோரப்பட்டது. சென்னை மாநகராட்சி நிலை வழக்கறிஞர் மூலமாக வழக்கு நடத்தப்பட்டு நீதிமன்ற தீர்ப்பில் தொழிலாளர் நீதிமன்றத்தை அணுகுமாறு தெரிவிக்கப்பட்டதின் பேரில் தொழிலாளர் நல அலுவலர் குறளகம் அவர்களிடம் வழக்கு தொடரப்பட்டது. சென்னை மாநகராட்சி சட்டக் குழுமத்தின் மூலம் உரிய பதிலுரை தொழிலாளர் நல அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட்டதில் சமரச முறிவு ஏற்பட்டது.
3. திரு.டி.பாண்டியன் மற்றும் 16 நபர்கள் மேற்கண்டவாறு தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு தற்போது (I.D.No.1 to 17 of 2005) வழக்கு நிலுவையில் உள்ளது.

திரு.வடிவேலு, மற்றும் 21 நபர்கள் மட்டும் முதலில் தொழிலாளர் நீதிமன்றத்தை அணுகி வழக்கு தொடரப்பட்டு நீண்ட நாட்களாக வழக்கு நடத்தப்பட்டு பின்பு 29.10.2001 நாளிட்ட உத்தரவில் மனுதாரர் மற்றும் 21 நபர்களுக்கு மீண்டும் பணியும், வழங்க வேண்டிய சம்பளத்தையும், (Back Wages) வழங்குமாறு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி மூலமாக மேற்கண்ட 29.10.2001 நாளிட்ட உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு உயர்நீதி மன்றத்தில் நீதிப்பேராணை மனுவாக (WRIT PETITION) தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு தொடரப்பட்ட நபர்களும் எதிர் மனு தாக்கல் சென்னை உயர்நீதி மன்றத்தில் செய்திருந்தார்கள். உயர்நீதி மன்றம் இவ்வழக்கில் 01.11.2004 நாளிட்ட W.M.P.No.35040/2004 in W.P.No.4137/2003 மற்றும் 7 நபர்கள் இடைக்கால மனுவின் மீது பிறப்பித்த உத்தரவில் மேற்கண்ட திரு.வடிவேலு மற்றும் 7 நபர்களுக்கு பின் சம்பளம் (U/s 17B arrears salary) வழக்கு முடியும் வரை வழங்குமாறு உத்தரவு வழங்கியது.

இந்த உத்தரவை எதிர்த்து சென்னை மாநகராட்சியால் உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு W.A.M.P.No.3733/2005 to 3740/2005 in W.A.No.2025 OF 2005 to 2032/2005, 6.10.2005 அன்று தாக்கல் செய்யப்பட்டு சென்னை மாநகராட்சிக்கு சாதகமாக தடை ஆணை பெறப்பட்டது. இதற்கு பின் மேற்கண்ட இடைக்கால மனுக்கள் 28.11.2006 மீண்டும் விசாரணைக்கு வந்து சென்னை மாநகராட்சி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்களை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்தும், நீதி பேராணை மனுவை முடிவுக்கு கொண்டு வருமாறும் உத்தரவு வழங்கப்பட்டது.

12.8.2003 நாளிட்ட உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் டிவிஷன் பெஞ்ச் அடங்கிய நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதனிடையே சென்னை உயர்நீதி மன்ற மாண்புமிகு நீதிபதிகள் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் தனது 15.4.2004 தேதியிட்ட W.A.NO.4056 of 2003 and W.A.M.P.NO.6686 of 2003 உத்தரவில் திரு. ஏ. அன்பரசு என்பவருக்கு மட்டும் மீண்டும் வேலையும் நிறுத்தப்பட்ட நாளிலிருந்து (U/s 17B of ID Act) வழங்க வேண்டிய ஊதியம் (Arrears) வழங்குமாறு தீர்ப்பு வழங்கியது.

15.4.2004 நாளிட்ட தீர்ப்பை அமுல்படுத்த வேண்டியிருந்த நிலையில் உரிய முறையில் ஆணையரது உத்தரவு பெறப்பட்டு திரு. ஏ.அன்பரசு என்பவரை மண்டலம்–5 மின்துறையில் ரூ.2550/– என்ற

**ம.அ.8.மி.து.ந.க.எண்.246/2007**

தொகுப்பூதியம் அடிப்படையில் மீண்டும் பணி 16.6.2004 முதல் வழங்கப்பட்டு, நீதிமன்றம் தெரிவித்திருந்த (Backwages) சம்பளத் தொகை ரூ.116116/– மற்றும் 29.10.2001 முதல் 15.6.2004 வரை ரூ.2550/– மாதந்தோறும் வழங்க வேண்டிய தொகைகள் ரூ.80570/–ஐ தொழிலாளர் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டது. மீதமுள்ள நபர்களுக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்து இடைக்கால தடை உத்தரவு பெறப்பட்டது. இடைக்கால மனுவின் மீது தாக்கல் செய்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. மாநகராட்சி சார்பில் தாக்கல் செய்த ரிட் மனு நிலுவையில் உள்ளது. இடைக்கால மனுவின்படி ஊதியம் வழங்காததால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.971 to 975 of 2005 ஆகிய கீழ்க்கண்ட 5 நபர்களால்,

| | | |
|---|---|---|
| 01. | திரு.டி.ஜான்பிரபாகரன் | ஐ.டி.எண்.248/2001, |
| 02. | திரு. டி.பிரகாஷ் | ஐ.டி.எண்.253/2001 |
| 03. | திரு. கே.புஷ்பராஜ் | ஐ.டி.எண்.237/2001 |
| 04. | ஏ.வடிவேலு | ஐ.டி.எண்.234/2001 |
| 05. | எஸ். சையத் சலீம் பாஷா | ஐ.டி.எண்.235/2001 |

தொடரப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ளது.

நீதிமன்றத்தின் 12.8.2003 நாளிட்ட தீர்ப்பின்படி ஒரு நபருக்கு வழங்க வேண்டிய சம்பளத் தொகை மற்றும் U/s 17B-ன்படி வழங்க வேண்டிய சம்பளம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | பின்சம்பளம் நீதிமன்ற உத்தரவின்படி | ரூ.1,16,116.00 |
| 2. | U/s 17B–ன்படி வழங்க வேண்டிய மாதந்திர ஊதியம் ரூ.2550/– வீதம் 29.10.01 முதல் 30.6.2007 வரை | ரூ.1,73,647.00 |
| | ஒரு தனி நபருக்கு வழங்க வேண்டிய தொகை | ரூ.2,89,763.00 |

தற்போது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ள 5 நபர்களுக்கு தொழிலாளர் நீதிமன்ற உத்தரவுப்படி வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.289763 x 5 = ரூ.14,48,815/– ஆகும்.

மேலும் திரு.எஸ்.சத்தியமூர்த்தி, மனுதாரரின் வழக்கறிஞர் அவர்கள் 29.03.2007 நாளிட்ட கடிதத்தில் திரு.டி.பாண்டியன் மற்றும் 16 நபர்களுக்கும் மேற்கண்டவாறு தொகை வழங்க வேண்டியதாகிவிடும். மண்டலம்–8ல் பணியிலிருந்து நிறுத்தப்பட்ட 64 நபர்களில் வழக்கு தொடர்ந்துள்ள 22 + 1 + 17 = 40 நபர்களுக்கும் நீதிமன்ற உத்தரவுப்படி பணி செய்யாத நாட்களுக்கு மேற்கண்டவாறு தொகை வழங்க வேண்டிய நிலை வருவதற்கான சாத்தியக்கூறு உள்ளது. மேலும் வழக்கு எதுவும் தொடராத மீதமுள்ள 24 நபர்களும் இதே அடிப்படையில் வழக்கு தொடர வாய்ப்புகள் உள்ளது. வழக்கின் உத்தரவுப்படி 30.6.2007 வரையிலான காலத்திற்கு தனிநபர் ஒருவருக்கு ரூ.2,89,763/– செலுத்தப்பட வேண்டுமானால் 64 நபர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையின் மூலம் ரூ.185 இலட்சங்களுக்கு மேல் மாநகராட்சிக்கு செலவீனம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நிறுத்தப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை தருவது அவசியமாகிறது. இவ்வழக்குகள் தொடர்பாக 64 நபர்களில் மேற்கண்ட 5 நபர்களை சேர்த்து 51 நபர்கள் மீண்டும் வேலை வேண்டி மனு சமர்ப்பித்துள்ளார்கள்.

மீண்டும் பணி வேண்டி வழக்கு தொடரப்பட்ட கீழ்க்கண்ட நபர்கள் மற்றும் வழக்கு எதுவும் தொடராமல் உள்ள நபர்களின் கடிதத்தில் "எங்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கும் பட்சத்தில் நாங்கள் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளை திரும்பப் பெற்றுக் கொள்ளவும், ஏற்கனவே தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையில் எந்தவித பிழைப்பூதியமும் கோரமாட்டோம்" என்று கீழ்க்கண்ட நபர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(1) திரு. ஏ.வடிவேலு மற்றும் 21 நபர்களால் வழக்கு தொடரப்பட்டது**

| வ.எண். | பெயர் திருவாளர்கள். | தொழில் தகராறு எண். |
|---|---|---|
| 1 | ஜி. சீனிவாசலு | 241/2001 |
| 2 | ஜெ. முரளிகிருஷ்ணன் | 250/2001 |
| 3 | ஜி. ஆறுமுகம் | 239/2001 |
| 4 | கே.நாராயணமூர்த்தி | 246/2001 |
| 5 | பி. கண்ணன் | 254/2001 |
| 6 | ஜெ. ஆனந்தன் | 236/2001 |
| 7 | எம். ஐசக் | 243/2001 |
| 8 | ஏ. கன்னியப்பன் | 251/2001 |

மேற்கண்டவர்களில் 2 நபர்கள் நீதிமன்ற பெஞ்ச் வழக்கில் மேல்முறையீடு செய்தவர்கள்.

(2) திரு. முரளிதரன் மற்றும் 16 நபர்களால் வழக்கு தொடரப்பட்டது

| வ.எண். | பெயர் திருவாளர்கள். | தொழில் தகராறு எண். |
|---|---|---|
| 1 | டி. பாண்டியன் | 05/2005 |
| 2 | எஸ். பாலமுருகன் | 12/2005 |
| 3 | ஈ. வெங்கடேசன் | 17/2005 |
| 4 | எஸ். சேகர் | 14/2005 |
| 5 | பி. முரளிதரன் | 01/2005 |
| 6 | எஸ். ரகு | 16/2005 |
| 7 | கெ.ஜான் ஜோசப் | 03/2005 |
| 8 | பி. வெங்கடேசன் | 08/2005 |
| 9 | டி. சுரேஷ் | 02/2005 |

| | | |
|---|---|---|
| 10 | பி. விநாயகமூர்த்தி | 11/2005 |
| 11 | டி. குமார் | 06/2005 |
| 12 | பி. சங்கர் | 15/2005 |
| 13 | டி. ஸ்ரீதர் | 09/2005 |
| 14 | எஸ். கோவிந்தசாமி | 10/2005 |
| 15 | பி. அன்பழகன் | 04/2005 |
| 16 | டி. வீராசாமி | 07/2005 |
| 17 | பி.ஆர். ஸ்ரீகாந்த் | 13/2005 |

இவர்கள் அனைவரும் நீதிமன்றத்தில் உள்ள வழக்கை திரும்பப் பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார்கள்.

(3) திரு. பி. கிருஷ்ணமூர்த்தி அவர்களால் தொடரப்பட்ட வழக்கு

01. திரு. பி. கிருஷ்ணமூர்த்தி ஐ.டி.எண்.413/2000

ஆகிய இவருக்கு நீதிமன்ற ஆணையில் தனியர் கோரிய அனைத்து பயன்களும் வழங்க உத்தரவு பெறப்பட்டுள்ளது.

(4) வழக்கு எதுவும் தொடராமல் மீண்டும் பணிவேண்டி மனு சமர்ப்பித்தவர்கள்

| வ.எண். | பெயர் திருவாளர்கள். |
|---|---|
| 1 | ஆர். மணி, த/பெ. ரங்கசாமி |
| 2 | எம். ரவி, த/பெ. முருகேசன் |
| 3 | எஸ். அசோகன், த/பெ.சண்பங்கி |
| 4 | எம். ஆனந்தன், த/பெ.முனுசாமி |
| 5 | எஸ். கோபிநாதன், த/பெ.சீனிவாசன் |
| 6 | கே. கன்னியப்பன், த/பெ. காத்தவராயன் |
| 7 | ஏ. செல்வகுமார், த/பெ. ஆறுமுகம் |
| 8 | ஆர். ரூபலிங்கம், த/பெ. ராமதாஸ் |
| 9 | எம். திலக்குமார், த/பெ. மன்னார் |
| 10 | கே. குணசேகர், த/பெ. கேசவன் |
| 11 | ஆர். விஜயகுமார், த/பெ.ராமசாமி |
| 12 | பி. ராஜா, த/பெ. பரமதயாளன் |
| 13 | என். மணிகண்டன், த/பெ.நாராயணன் |

ஆக மொத்தம் 64 நபர்களில் 20+17+1 = 38 நபர்களால் வழக்கு தொடரப்பட்டது மற்றும் 13 நபர்கள் மீண்டும் பணிவேண்டி மனு செய்பவர்கள் ஆக 51 நபர்கள் மீண்டு பணி வேண்டி மனு சமர்ப்பித்துள்ளார்கள்.

சென்னை மாநகராட்சி சார்பாக நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் மாநில அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்–1 திரு. பி.எஸ். ராமன் அவர்கள் ஆஜரானதால், மேற்கண்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்பாகவும், நிலுவையில் உள்ள இவ்வழக்குகள் தொடர்பாகவும் உச்சநீதி மன்றத்தில் (SUPREME COURT OF INDIA) சென்னை மாநகராட்சி மூலமாக மேல்முறையீடு செய்வதற்காக மாநில அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்–1 அவர்களது கருத்துரை வேண்டப்பட்டது.

திரு. பி.எஸ். ராமன், கூடுதல் தலைமை வழக்குரைஞர்–1, தமிழ்நாடு அரசு அவர்களது 6.9.2007 நாளிட்ட இவ்வழக்கு குறித்த கடிதத்தில் கீழ்க்கண்ட கருத்துரை வழங்கியுள்ளார்.

"The contempt petition Nos. 971/2005 Etc. had come up before His Lordship Honourable Justice Mr. D. Murugesan, when I had made a statement on behalf of the Corporation that negotiation were in progress between the Corporation and concerned workmen in the above contempt petitions for settlement of their claim.

I am informed that the final offer made on behalf of the workmen was for reinstatement with an exgratia amount of Rs.25,000/- in lieu of their backwages.

I am of the opinion that it is a reasonable offer and it would be in the interest of the Corporation to put an end to the whole dispute by paying the amount aforesaid and granting them permanent employment".

மேற்கண்ட கருத்துருவின் அடிப்படையில், 29.10.2001 நாளிட்ட உத்தரவை அமுல்படுத்துமாறு, சென்னை உயர்நீதி மன்றத்தில் டிவிஷன் பெஞ்க் அடங்கிய நீதிமன்றத்தில் 12.8.2003 நாளிட்ட உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டு தற்போது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்ட கீழ்க்கண்ட 5 நபர்களுக்கு மட்டும், கூடுதல் தலைமை வழக்குரைஞர்–1, தமிழ்நாடு அரசு தனிநபருக்கு நீதிமன்ற வழக்கு தீர்ப்பின்படி கருணைத் தொகை வழங்க வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 01 | திரு. ஏ.வடிவேலு, I.D.No.234/2001 | கருணைத் தொகை ரூ.25000/– |
| 02 | திரு. எஸ். சையத்சலீம்பாஷா, I.D.No.235/2001 | கருணைத் தொகை ரூ.25000/– |
| 03 | திரு. கே.புஷ்பராஜ், I.D.No.237/2001 | கருணைத் தொகை ரூ.25000/– |
| 04 | திரு. டி. ஜான் பிரபாகரன், I.D.No.248/2001 | கருணைத் தொகை ரூ.25000/– |
| 05 | திரு. கே. ப்ரகாஷ், I.D.No.253/2001 | கருணைத் தொகை ரூ.25000/– |
| | | மொத்த தொகை ரூ.1,25,000/– |

**ம.அ.8.மி.து.ந.க.எண்.246/2007**

இந்நிலையில் தெருவிளக்கு பராமரிப்புப் பணியின் தற்போதைய நிலைமை, மின்துறையில் உள்ள களப் பணியிடங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும், நீதிமன்றத்தில் பல்வேறு நிலைகளில் நிலுவையில் இருக்கும் வழக்குகள் மற்றும் தற்போது தொடங்கப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தவிர்க்க கீழ்க்கண்ட இனங்களின் மீது நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

1. நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தவிர்க்கும் பொருட்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் 12.8.2003 நாளிட்ட தீர்ப்பில் சென்னை தொழிலாளர் நீதி மன்றத்தின் 29.10.2001ன் தீர்ப்பின்படி மேற்கண்ட வழக்கு தொடர்ந்துள்ள 20+17+1 = 38 நபர்கள் மற்றும் வழக்கு எதுவும் தொடராமல் மீண்டும் வேலை கோரி மனு செய்தவர்கள் 13 நபர்கள் ஆகிய 51 நபர்களுக்கு மீண்டும் பணி வழங்கவும்,

2. நீதிமன்ற தீர்ப்பின்படியும், கூடுதல் தலைமை வழக்குரைஞர்–1 திரு. பி.எஸ். ராமன் அவர்களின் கருத்துரையின்படியும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ள மேற்கண்ட 5 நபர்களுக்கு, கருணைத் தொகையாக தனி நபருக்கு ரூ.25,000/– வீதம் 5 நபர்களுக்கு ரூ.1,25,000/–ஐ அவரவர் பெயரில் காசோலையாக துறைத்தலைவர்/மின்சாரம் அவர்கள் மூலமாக வழங்கவும்,

3. மேற்கண்ட தொகையை மண்டலம்–8, மின்துறை செலவு மையம் 16 கணக்கு எண்.116ல் நடப்பு நிதியாண்டு 2007–08 கூடுதல் நிதி ரூ.1,25,000/– ஐ ஒதுக்கீடு செய்யவும்,

4. சென்னை மாநகராட்சி மின்சாரத் துறையில் களப் பணியிடங்கள் அதிகமாக காலியாக உள்ளதால் 51 (20+17+1+13) நபர்களையும் மண்டலம்–8, மின்துறையில் துறைத்தலைவர் / மின்சாரம் அவர்கள் மூலமாக ரூ.2550/– தொகுப்பு ஊதியம் முறையில் மீண்டும் பணி வழங்கி பின்னர் மாமன்றத்தின் அனுமதியுடன் அரசுக்கு விரிவான குறிப்பினை அனுப்பி அரசின் அனுமதி பெறப்பட்டு உரிய முறையில் பணி நிரந்தரம் செய்யவும்,

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.8.மி.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**தி.க.மே.து.ந.க.எண்.எ3/ 3290 /2007**

**ஆணையாளர் அவர்களின் 09.10.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.546/2007 பொருள் எண்.64

**பணியமைப்பு**

அரசாணை நிலை எண்.158, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.3)துறை, நாள் 19.06.1997ல் அரசு சென்னை மாநகராட்சியில் ஒப்பளிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணியிடங்களை 7347 லிருந்து 10130 ஆக அதிகரித்து ஆணை பிறப்பித்தது. அவ்வாறு அதிகரிக்கும் போது 10130 பணியிடங்களில் 1688 பணியிடங்கள் 3 ஆண்டுகளுக்கு தொகுப்பூதிய பணியிடங்களாக இருக்க வேண்டும் என்றும் பின்னர் தேவையைப் பொறுத்து அப்பணியிடங்களை நிரந்தரப்பணியிடங்களாக மாற்ற ஆணையர் அவர்கள் நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அரசு ஆணையிட்டது. அதன் பிறகு அரசு வெளியிட்ட அரசாணை எண்.277, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.3) துறை, நாள்.29.5.98, ல் அரசு வழங்கிய உத்தரவின் அடிப்படையில் சென்னை மாநகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் தற்காலிகமாக பணியாற்றி வந்த துப்புரவு பணியாளர்கள் அந்த புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் 16.10.99 முதல் நியமிக்கப்பட்டனர். பின்னர் 28.2.2006 நாளிட்ட அரசின் அறிவுறுத்தல்களின்படி அத்தொகுப்பூதிய பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் நிரந்தரப்பணியாளர்களாக பணியமர்வு செய்யப்பட்டனர். இதற்கிடையில் சென்னை மாநகராட்சி மார்ச் 2000–ல் சென்னை மாநகராட்சி மண்டலம் 6, 8 மற்றும் 10 ஆகிய மண்டலங்களின் துப்புரவு பணியினை தனியார் வசம் ஒப்படைத்தது. அப்போது அந்த மண்டலங்களில் பணிபுரிந்த துப்புரவு பணியாளர்களில் சென்னை மாநகராட்சியின் அலுவலகங்கள் மற்றும் கட்டடங்களை தூய்மை செய்யும் பணிக்கு தேவையான பணியாளர்கள் தக்க வைத்துக்கொள்ளப்பட்டு மீதமுள்ளவர்கள் பிற மண்டலங்களுக்கு தேவையின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டனர்.

இப்போது சென்னை மாநகராட்சியில் ஒப்பளிக்கப்பட்ட 10130 துப்புரவு பணியாளர் பணியிடங்களில் 7653 எண்ணிக்கை பணியாளர்கள் உள்ளனர். மேலும் 2021 எண்ணிக்கையில் துப்புரவு பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையிலும் மற்றும் 4 பதிலி துப்புரவு பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இந்த எண்ணிக்கை குடிசை மாற்று வாரியத்திலிருந்து சென்னை மாநகராட்சிக்கு குடிசைமாற்று வாரிய துப்புரவு பணி மாற்றல் செய்யப்பட்டபோது சென்னை மாநகராட்சிக்கு நிறுவன மாற்றம் செய்யப்பட்ட நிரந்தர மற்றும் தினக்கூலி பணியாளர்களும் அடங்கும்.

இது குறித்து இங்கு சமர்ப்பிக்கப்படுவதாவது, இந்த 10130 பணியிடங்கள் 1997ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டது. தற்போது 10 ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த 10 ஆண்டில் சென்னை மாநகரில் மக்கள் தொகை பெருக்கமும் வீடுகளின் மற்றும் குடியிருப்புகளின் எண்ணிக்கையும் வணிக நடவடிக்கையும் அதிகரித்துள்ளன. இந்த பத்து ஆண்டுகளாக தனிவீடுகளாக இருந்த இடங்கள் அடுக்குமாடிகளாகவும் மற்றும் பன்னடுக்கு குடியிருப்பு வளாகங்களாகவும் மாறிவிட்டிருக்கின்றன. அதன் காரணமாக சென்னையின் மக்கள் தொகையும் மிக அதிக அளவில் பெருகியுள்ளது. மேலும் பணி, அலுவல் மற்றும் பல்வேறு காரணங்களுக்காக தினசரி நகருக்குள் வந்து செல்லும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இவ்வாறு நகரில் வாழும் மக்கள் தொகை மற்றும் வந்து செல்லும் மக்கள் தொகை அதிகரிப்பினால் உருவாகும் குப்பையின் அளவும் அதற்கேற்றவாறு அதிகரித்துள்ளது. எனவே, அதிகரித்துள்ள குப்பையினை அகற்ற போதுமான பணியாளர்கள் தேவை என்பதால், 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஒப்பளிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களுக்கான பணியிடங்களை சீராய்வு செய்து மறுநிர்ணயம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

இது குறித்து இங்கு சமர்ப்பிக்கப்படுவதாவது, மண்டலம் 3ன் துப்புரவு பணியினையும் தனியார் மூலம் நிறைவேற்ற அரசின் ஒப்புதலுடன் தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தனியார் நிறுவனமும் விரைவில் பணியினை துவங்கும். இந்நிலையில் தற்போது சென்னை மாநகராட்சியில் துப்புரவு பணியாளர்களுக்கான பணியிடங்களை மண்டலம் 3, 6, 8 மற்றும் 10 நீங்கலாக மற்ற மண்டலங்களுக்கு மட்டும் மறு நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

இது குறித்து இங்கு சமர்ப்பிக்கப்படுவதாவது, பாரத உச்சநீதி மன்றத்தினால் முதல் வகுப்பு நகரங்களில் உள்ள திடக்கழிவு மேலாண்மை செயல்பாட்டுமுறைகளை ஆய்வு செய்து அவற்றில் உள்ள குறைகளை இனங்கண்டு அவைகளை களைந்து ஒரு சிறந்த செயல்பாட்டு முறையினை பரிந்துரை செய்ய நீதிப்பேராணை மனு எண்.888/1996ல் வழங்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழு தங்களின் பரிந்துரையில் அத்தியாயம் 3.7ல் துப்புரவு பணியாளர்களின் பணிக்கான அளவுகோல் பற்றி கீழ்வருமாறு கூறியுள்ளனர்.

1. அதிக நெருக்கமான சாலையில் 250 முதல் 350 மீட்டர் தூரத்திற்கு 1 பெருக்கும் தொழிலாளி
2. மத்திய நெருக்கமான சாலையில் 400 முதல் 600 மீட்டர் தூரத்திற்கு 1 பெருக்கும் தொழிலாளி
3. குறைவான நெருக்கமுள்ள சாலையில் 650 முதல் 750 மீட்டர் தூரத்திற்கு 1 பெருக்கும் தொழிலாளி

மத்திய அரசினால் வெளியிடப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவுகள் மேலாண்மை கையேடு(முதல் பதிப்பு) மே 2000லும் அத்தியாயம் 19.6.1ல் இதே அளவு கோல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**தி.க.மே.து.ந.க.எண்.எ3/ 3290 /2007**

இந்த இரண்டு பரிந்துரைகளிலும் சாலைப்பகுப்பான்கள் உள்ள சாலைகள் இரண்டு சாலைகளாக கருதப்படவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் மேலே சொன்ன வல்லுநர் குழுவின் பரிந்துரையிலும் மற்றும் கையேட்டிலும் குப்பையை வாகனங்களில் ஏற்றுவர்களுக்கான அளவுகோல்கள் மற்றும் குப்பைமாற்று நிலையங்கள் மற்றும் குப்பை கொட்டும் வளாகங்கள் மற்றும் பொது அங்காடிப்பகுதிகள் ஆகிய இடங்களில் துப்புரவு பணி செய்ய தேவையான பணியாட்கள் பற்றிய அளவுகோல்கள் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. இது மட்டுமல்லாமல் தற்போது வீட்டுக்கு வீடு சென்று மூன்று சக்கர மிதிவண்டிகளில் குப்பை அகற்றப்படுவதால் அதற்கு தேவையான பணியாளர்களின் எண்ணிக்கையும் தீர்வு செய்து கூடுதலாக சேர்க்கப்பட வேண்டும். இவைகளுக்கான அளவுகோலும் வல்லுநர் குழுவின் பரிந்துரையிலும் மற்றும் திடக்கழிவு மேலாண்மை கையேட்டிலும் சொல்லப்படவில்லை. ஆயினும் வேறு சில முறைகளில் அவைகளும் தீர்வு செய்யப்பட வேண்டும்.

இந்நிலையில் நகராட்சிகளுக்கான துப்புரவு பணியாளர்களின் பணியிடங்களை நிர்ணயம் செய்ய உள்ள அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல்(ந.ப.3) துறை, நாள் 30.04.97ல் உள்ள அளவு கோல்களை மற்றும் மாநகராட்சியில் நடைமுறையில் உள்ள அளவுகோல்களை பின்பற்றி சென்னை மாநகராட்சியில் சாலைகளை பெருக்கும் பணி நீங்கலாக இதர துப்புரவு பணிகளை செய்ய தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கையை கணித்து சென்னை மாநகராட்சிக்கு தேவையான மொத்த துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கையை தீர்வு செய்யலாம்.

அவ்வாறு தீர்வு செய்த பிறகு துப்புரவு பணி விடுமுறையின்றி தினமும் தொடர்ந்து நடைபெறவேண்டியிருப்பதால் வாரந்தர விடுப்பு சுழற்சி முறையில் அளிப்பதற்கு தேவையான பணியாளர்களின் எண்ணிக்கையினையும் கணித்து துப்புரவு பணியாளர்களின் பணியிடங்களின் எண்ணிக்கையை மறு நிர்ணயம் செய்யலாம்.

இதன்படி துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு கணிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியாளர் பணிவிவரம் | | தேவையான எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | முதல் நிலை துப்புரவு பணிக்கு தேவையான துப்புரவு பணியாளர்கள் (மண்டலம்1,2,4,5, 7 மற்றும் 9க்கு) சாலையின் நீளம் அடிப்படையில் | | 3583 |
| (2) | இரண்டாம் நிலை துப்புரவு பணிக்கு (மண்டலம்1,2,4,5, 7 மற்றும் 9க்கு) | | 3349 |
| | பெரிய வாகனங்களுக்கு (134 x 4) | 536 | |
| | சிறிய வாகனத்திற்கு (106 x 3) | 318 | |
| | குப்பை மாற்று நிலையத்திற்கு (மண்டலம் 2,4, 5, 7 மற்றும் 9) (20 டன்னிற்கு 2 பேர் வீதம் 5 குப்பை மாற்று நிலையத்திற்கு) | 88 | |
| | ஒரு மூன்று சக்கர மிதி வண்டிக்கு1 ஆண் பணியாளர் அல்லது 2 பெண் பணியாளர் வீதம் (சராசரி 1.5 பணியாளர் வீதம்) 1604 வண்டிக்கு | 2407 | |
| | மொத்தம் | 3349 | |
| 3 | அங்காடிகளுக்கு( 1 அங்காடிக்கு 4 வீதம் 39 அங்காடிகளுக்கு) | | 156 |
| 4 | பூங்காக்களுக்கு 2 நபர் வீதம் ( 233 பூங்காக்கள்) | | 466 |
| 5 | மயான பூமிக்கு 2 நபர் வீதம் (38 மயானங்களுக்கு) | | 76 |
| 6 | சென்னை மாநகராட்சி கட்டடங்களுக்கு | | 611 |
| 7 | குப்பை கொட்டும் வளாகங்களுக்கு | | 96 |
| | மொத்தம் | | 8337 |

ஆக மொத்தம் தற்போது சென்னை மாநகராட்சியில் தனியார் துப்புரவு பணி மண்டலங்களான மண்டலம் 3, 6, 8 மற்றும் 10 நீங்கலாக மண்டலம் 1, 2, 4, 5, 7 மற்றும் 9ல் துப்புரவு பணி செய்ய தேவையான பணியாளர்கள் மற்றும் அனைத்து மண்டலங்களிலும் உள்ள மாநகராட்சி கட்டடங்களை பராமரிக்க தேவையான துப்புரவு பணியாளர்கள் 8337 மண்டல வாரியாக பணியிடங்கள் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த தொழிலாளர்களுக்கு வாரவிடுமுறை வழங்க தேவையான கூடுதல் பணியாளர்களின் எண்ணிக்கை 1390(8337 – 6)

எனவே சென்னை மாநகராட்சிக்கு தேவையான மொத்த துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 9727 (8337+1390)

தற்போது பணியில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 7653

கூடுதலாக தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 2074

**தி.க.மே.து.ந.க.எண்.எ3/ 3290 /2007**

மேற்சொன்ன வழிமுறைகளின் படி கணிக்கப்பட்ட பணியாளர் தேவை சென்னை மாநகராட்சியில் நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல் விதிகள்)படி துப்புரவு பணியை திறம்பட செயலாக்கவும் குப்பையினை வீட்டுக்கு வீடு சென்று குப்பை அகற்றும் பணியினை திறம்பட முழுமையாக செயலாக்கவும் மேற்சொன்னபடி 7653 பணியாளர்கள் சென்னை மாநகராட்சியில் மண்டலம் 3, 6, 8 மற்றும் 10 நீங்கலாக மற்ற மண்டலங்களுக்கும் மற்றும் அனைத்து மண்டலங்களில் மேலே பட்டியலிடப்பட்டுள்ள இன்ன பிற பணிகளை நிறைவேற்ற தேவைப்படுகின்றனர்.

இவ்வாறு கணிப்பீடு செய்திருப்பது மண்டலம் 3ன் துப்புரவு பணியினையும் தனியார் மூலம் நிறைவேற்றும் நிலையில் இதர மண்டலங்களின் துப்புரவு பணியினையும் மற்றும் அனைத்து மண்டலங்களின் நிறுவனஅலுவலகங்களை சுத்தம் செய்யும் பணிக்கும் தேவையான பணியாளர்களின் எண்ணிக்கையினை நிர்ணயிப்பதற்காகும்.

எனினும் தற்போதைய நிலையில் அதாவது மண்டலம் 6, 8 மற்றும் 10ன் துப்புரவு பணி மட்டும் தனியார் மூலம் செயலாக்கப்படுவதாக கருத்தில் கொண்டு கணித்தால் இதர 7 மண்டலங்களுக்கு துப்புரவு பணியினை செய்வதற்கும் மற்றும் அனைத்து மண்டலங்களின் நிறுவனஅலுவலகங்களை சுத்தம் செய்யும் பணிக்கும் தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கையினை கீழ்வருமாறு கணிக்கலாம்.

| வ.எண் | பணியாளர் பணிவிவரம் | | தேவையான எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | முதல் நிலை துப்புரவு பணிக்கு தேவையான துப்புரவு பணியாளர்கள் (மண்டலம்1, 2, 3, 4, 5, 7 மற்றும் 9க்கு) சாலையின் நீளம் அடிப்படையில் | | 4127 |
| (2) | இரண்டாம் நிலை துப்புரவு பணிக்கு (மண்டலம்1, 2,3,4,5, 7 மற்றம் 9க்கு) | | 3933 |
| | பெரிய வாகனங்களுக்கு (156 x 4) | 624 | |
| | சிறிய வாகனத்திற்கு (122 x 3) | 366 | |
| | குப்பை மாற்று நிலையத்திற்கு (மண்டலம் 2, 3, 4, 5, 7 மற்றும் 9) (20 டன்னிற்கு 2 பேர் வீதம் 5 குப்பை மாற்று நிலையத்திற்கு) | 104 | |
| | ஒரு மூன்று சக்கர மிதி வண்டிக்கு1 ஆண் பணியாளர் அல்லது 2 பெண் பணியாளர் வீதம் (சராசரி 1.5 பணியாளர் வீதம்) 1892 வண்டிக்கு | 2839 | |
| | மொத்தம் | 3933 | |
| 3 | அங்காடிகளுக்கு( 1 அங்காடிக்கு 4 வீதம் 47 அங்காடிகளுக்கு) | | 188 |
| 4 | பூங்காக்களுக்கு 2 நபர் வீதம் ( 233 பூங்காக்கள்) | | 466 |
| 5 | மயான பூமிக்கு 2 நபர் வீதம் (38 மயானங்களுக்கு) | | 76 |
| 6 | சென்னை மாநகராட்சி கட்டடங்களுக்கு | | 611 |
| 7 | குப்பை கொட்டும் வளாகங்களுக்கு | | 96 |
| மொத்தம் | | | 9497 |

மேற்சொன்னவாறு கணிக்கப்பட்ட 9497 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்களுக்கு சுழற்சிமுறையில் வார விடுப்பு வழங்க 1583(9497 – 6) பணியாளர்களின் பணியிடங்கள் தேவை. எனவே, தற்போது தனியார் மூலம் துப்புரவு பணி செயலாக்கப்பட்டு வரும் மண்டலங்களான மண்டலம் 6, 8 மற்றும் 10 நீங்கலாக பிற 7 மண்டலங்களில் துப்புரவு பணிக்கும் மற்றும் அனைத்து மண்டலங்களில் இன்ன பிற மேற்சொன்ன தூய்மைப்பணிக்கும் மொத்தம் தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 11080 ஆகும்(9497 + 1583).

மண்டலம் 6, 8 மற்றும் 10ல் புதிய ஒப்பந்த நிறுவனம் செய்து வரும் துப்புரவு பணியினை சென்னை மாநகராட்சி உற்றுநோக்கி அவர்களின் செயல்பாட்டினை ஆய்வு செய்து வருகிறது. எனவே, மண்டலம் 3ன் துப்புரவு பணியினை அவர்கள் வசம் ஒப்படைப்பது குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவேண்டியுள்ளது. எனவே, மண்டலம் 3ன் துப்புரவு பணியினையும் சென்னை மாநகராட்சியே செயலாக்கினால் தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை மேற்சொன்னவாறு கணிக்கப்பட்டது.

எனவே, மேற்சொன்னவாறு கூடுதல் பணியாளர்களை பணியமர்வு செய்வதும் மற்றும் அதற்காக துப்புரவு பணியாளர்களின் பணியிடங்களை அதிகரிப்பு செய்து மறுநிர்ணயம் செய்வதும் அத்தியாவசியமானதாகும்.

தற்போது சென்னை மாநகராட்சியில் பணி புரியும் தினக்கூலி பணியாளர்களில் பலர் பல ஆண்டுகளுக்கும் மேலாக தினக்கூலி பணியாளர்களாக பணிபுரிந்து வருவதுடன் அவர்களில் பலர் பிற இடங்களில் வேலை வாய்ப்பினை பெறும் வயதினையும் கடந்தவர்களாகவே உள்ளனர். ஆகவே இதனை ஒரு சமுதாய பிரச்சனையாகவும் கருதி அவர்களை நிரந்தரப்பணியிடங்களில் பணியமர்வு செய்யலாம். மேலும் தற்போது தினக்கூலி பணியாளர்களில் அரசு வேலைக்கான வயது வரம்பை கடந்தவர்களும் உள்ளனர்.

இது குறித்து இங்கு மேலும் தெரிவிக்கப்படுவதாவது, சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே தினக்கூலி பணியாளர்களை தொகுப்பூதியத்தில் பணிநியமனம் செய்யும் போது அவர்களுக்கு அவர்கள் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்த பதிவின் மூப்பின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து தொகுப்பூதியப்பணியிடத்தில் நியமனம் வழங்கப்பட்டது. ஆனால் தற்போது சென்னை மாநகராட்சியில் தொகுப்பூதிய துப்புரவு பணியாளர் பணியிடங்கள் இல்லை.

**தி.க.மே.து.ந.க.எண்.எ3/ 3290 /2007**

அதே அடிப்படையில் தற்போதுள்ள தற்காலிக தினக்கூலி துப்புரவு பணியாளர்களை நேரடியாக அவர்கள் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்த பதிவின் மூப்பின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து மறுநிர்ணயம் செய்யப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கையில் தற்போது பணியிலிருப்பவர் போக எஞ்சிய பணியிடங்களில் பணியமர்வு செய்யலாம். தற்போது தினக்கூலி அடிப்படையில் பணியாற்றுபவர்களில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் துப்புரவு பணி சென்னை மாநகராட்சிக்கு மாற்றம் செய்யப்பட்ட போது சென்னை மாநகராட்சிக்கு நிறுவன மாற்றம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையிலான துப்புரவு பணியாளர்களும் அடங்குவர்.

இது குறித்து இங்கு மேலும் சமர்ப்பிக்கப்படுவதாவது, வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்யாதிருக்கும் தொழிலாளர்களை வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்யச்சொல்லி அறிவுறுத்தி அந்த பதிவின் அடிப்படையில் அவர்களது பெயர் முதன்மை பட்டியலில் சேர்க்கப்படும்.

தினக்கூலி பணியாளர்கள் மற்றும் பதிலி பணியாளர்களை முறையான சம்பள விகிதம் கொண்ட ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களில் பணியமர்வு செய்யும் போது தேவையான நிகழ்வுகளில் அரசு வேலைக்கான வயது வரம்பிலிருந்து தளர்வும் வழங்க வேண்டும்.

இது குறித்து இங்கு மேலும் தெரிவிக்கப்படுவதாவது, இன்றைய நிலையில் மண்டலம் 6, 8 மற்றும் 10ன் துப்புரவு பணி மட்டும் தனியார் மூலம் தொடரும் பட்சத்தில் வார சுழற்சி விடுப்பிற்கும் சேர்த்து 11080 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்களின் பணியிடங்கள் தேவை. இதில் தற்போது பணியில் உள்ள 7653 பணியாளர்கள் போக இன்னும் உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் 3427. இதில் தற்போது பணியில் உள்ள 2025(2021 + 4) தினக்கூலி மற்றும் பதிலி பணியாளர்களை பணியமர்வு செய்தால் 1402 பணியிடங்கள் காலியாக இருக்கும். இந்தப்பணிக்கு உரிய விதிமுறைகளை பின்பற்றி பணியாளர்களை பணியமர்வு செய்யலாம்.

மண்டலம் 3ன் துப்புரவு பணியும் இந்த மேற்சொன்ன மூன்று மண்டலங்களின் துப்புரவு பணியுடன் தனியார் மூலம் செயலாக்கப்படும் பட்சத்தில் வார சுழற்சி விடுப்பிற்கும் சேர்த்து 9727 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்களின் பணியிடங்கள் தேவை. இதில் தற்போது பணியில் உள்ள 7653 பணியாளர்கள் போக இன்னும் உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் 2074. இதில் தற்போது பணியில் உள்ள 2025(2021 + 4) தினக்கூலி மற்றும் பதிலி பணியாளர்களை பணியமர்வு செய்தால் 49 பணியிடங்கள் காலியாக இருக்கும். இந்தப்பணிக்கு உரிய விதிமுறைகளை பின்பற்றி பணியாளர்களை பணியமர்வு செய்யலாம். எனவே, மண்டலம் 3ன் துப்புரவு பணி தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டாலும் தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை 9727 மற்றும் அதில் தற்போது பணியிலிருப்பவர்களின் பணியிடம் போக கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் 2074 ஆகும். ஆகவே அவ்வாறு கூடுதலாக உருவாக்கப்படும் பணியிடத்தில் தற்போது பணியாற்றும் தினக்கூலி மற்றும் பதிலி பணியாளர்களை எந்த சிக்கலும் இன்றி பணியமர்வு செய்யலாம்.

இந்த சூழ்நிலையில் ஏற்கப்படின்,

(1) சென்னை மாநகராட்சிக்கு தேவையான மொத்த துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை

(அ) மண்டலம் 6, 8 மற்றும் 10ன் துப்புரவு பணியுடன் மண்டலம் 3ன் துப்புரவு பணியும் தனியார் மூலம் நிறைவேற்றப்படும் நிலையில் அந்த மண்டலங்கள் நீங்கலாக துப்புரவு பணி மற்றும் சென்னை மாநகராட்சியின் அலுவலக கட்டடங்கள் மற்றும் இன்ன பிற பணிகளுக்காக அனைத்து மண்டலங்களிலும் துப்புரவு பணியினை மேற்கொள்ள மேற்சொன்ன அளவுகோல்களின்படி 9727 என்று நிர்ணயம் செய்யவும்

(ஆ) மண்டலம் 6, 8 மற்றும் 10ன் துப்புரவு பணிக்கு நீங்கலாக மற்றும் சென்னை மாநகராட்சியின் அலுவலக கட்டடங்கள் மற்றும் இன்ன பிற பணிகளுக்காக அனைத்து மண்டலங்களிலும் துப்புரவு பணியினை மேற்கொள்ள மேற்சொன்ன அளவுகோல்களின்படி 11080 என்று நிர்ணயம் செய்யவும்

(2) தற்போது பணியிலிருப்பவர்கள் போக எஞ்சியுள்ள பணியிடங்களில் தற்போது சென்னை மாநகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் 2021 துப்புரவு பணியாளர்களை, (குடிசை மாற்று வாரியத்திலிருந்து சென்னை மாநகராட்சிக்கு நிறுவனமாற்றல் அடிப்படையில் வந்த தினக்கூலி பணியாளர்கள் உட்பட) மற்றும் 4 பதிலி துப்புரவு பணியாளர்களை அவர்கள் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்த பதிவின் மூப்பின் அடிப்படையில் முதன்மைப்பட்டியல் தயாரித்து மறுநிர்ணயம் செய்யப்பட்ட பணியிடங்களில் உள்ள காலிப்பணியிடங்களில் பணியமர்வு செய்யவும்,

(3) வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்யாதிருப்பவர்களை வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்ய அறிவுறுத்தல்கள் வழங்கவும், அந்த பதிவின் மூப்பின் அடிப்படையில் அவர்களையும் முதன்மைப்பட்டியலில் சேர்க்கவும்

(4) தினக்கூலி பணியாளர்களில் அரசு பணிக்கான வயது வரம்பை கடந்தவர்களுக்கு வயது வரம்பிலிருந்து தளர்வு வழங்கவும்

(5) இவர்களை பணியமர்வு செய்த பிறகும் எஞ்சியுள்ள பணியிடத்திற்கு உரிய விதிமுறைகளை பின்பற்றி நியமனங்கள் வழங்கவும் அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.ஈ3/42944 /2007
ஆணையாளர் அவர்களின் 09.10.2007 நாளிட்ட குறிப்பு

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.547/2007 பொருள் எண்.65

**பணியமைப்பு – துணை ஆணையர் (சுகாதாரம்) பொறுப்பேற்ற விவரம்**

அரசு ஆணை (நிலை) எண்.3630, பொது (சிறப்பு–அ) துறை, நாள்.17.09.2007ன்படி, டாக்டர்.இரா ஆனந்த குமார், இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (மேம்பாடு) மற்றும் திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி, மதுரை அவர்கள் சென்னை மாநகராட்சியில் துணை ஆணையர் (சுகாதாரம்) ஆக அயற்பணியில் பணி நியமனம் செய்யப்பட்டு 21.09.2007 அன்று பிற்பகல் பொறுப்பேற்றுள்ள விவரம், மன்றத்தின் தகவலுக்காகவும், பதிவுக்காகவும், நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.ஈ1/41820/2007

ஆணையாளர் அவர்களின் 22.10.2007 நாளிட்ட குறிப்பு

29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.548/2007 பொருள் எண்.66

## ஓய்வூதியம்

ஓய்வு பெற்ற பொறியாளர்கள் திரு.வெ.அடைக்கன் மற்றும் சிலர் அளித்துள்ள கோரிக்கைக் கடிதத்தில், சென்னை மாநகராட்சியில் பொறியாளர்களாக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக தாங்கள் ஓய்வு பெற்றுள்ளதாகவும், இவர்கள் மீது மட்டும் 1998ஆம் ஆண்டு மேற்கொண்ட சாலை வெட்டு சீரமைக்கும் பணியில் குறை இருப்பதாகவும், இதற்கு தமிழக விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககத்தினர் 2000ஆம் ஆண்டு மேற்கொண்ட நடவடிக்கையின் முடிவு அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தி ஓய்வூதிய பயன்களில் தற்காலிக ஓய்வூதியமும், பணிக்கொடையும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்குறிப்பிட்ட தமிழக விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககத்தின் நடவடிக்கை முன்னர் சென்னை மாநகராட்சி பொறியாளர்கள் சிலர் ஓய்வு பெற்று முழு ஓய்வூதியமும், முழு பணிக்கொடையும் பெற்றுள்ளதாகவும், 2006ஆம் ஆண்டுக்கு பிறகு ஓய்வு பெற்ற பொறியாளர்கள் சிலர் நிபந்தனை ஏதுமின்றி ஓய்வு பெற்று முழு ஓய்வூதியமும், முழு பணிக்கொடையும், பெற்றுள்ளதாகவும் தெரிவித்து தங்களுக்கும் இதே போன்று முழு ஓய்வூதியமும், முழு பணிக்கொடையும் வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1998ஆம் ஆண்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் துறையால் மேற்கொள்ளப்பட்ட பணிக்காக சென்னை மாநகராட்சியால் சாலை வெட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பணியில் குறைபாடு உள்ளது என்று எழுந்த புகார் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட தமிழக விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககம் தனது அறிக்கையினை அரசுக்கு அளித்ததன் தொடர்ச்சியாக, அரசாணை எண்.159, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.28.12.2006ல் இப்பொருள் தொடர்பாக விரிவாக ஆய்வு செய்து குறைபாடுகள் ஏதேனுமிருப்பின் துறைசார்ந்த நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

அரசின் ஆணையினைத் தொடர்ந்து மேற்படி பொருள் தொடர்பாக சென்னை மாநகராட்சி அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேற்படி சாலைவெட்டுப் பணியில் ஈடுபட்ட மனுதாரர்கள், ஓய்வுபெறும் போது, அவர்கள் மீது மாநில விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககம் அளிக்கும் அறிக்கையினைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படவிருக்கும் குற்றவியல் நடவடிக்கை குந்தகமின்றியும், தணிக்கைத் தடைகளுக்கு பொறுப்பாக்கியும், சென்னை மாநகராட்சிக்கு மற்ற நிகழ்வின் மூலம் நிதி இழப்பு அல்லது செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் நீண்டகால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பின் அவைகளுக்கு ஓய்வு பெற்ற இப்பொறியாளர்களைப் பொறுப்பாக்கி ஓய்வு பெற அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

1) அரசாணை எண்.287, நிதித்துறை, நாள்.07.04.95ன்படி ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளபட்சத்தில், நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி ஓய்வு பெற அனுமதி அளிக்கப்பட்டுள்ள ஓய்வு பெற்ற அலுவலருக்கு, தற்காலிக ஓய்வூதியம் வழங்கலாம்.

2) அரசாணை எண்.784, நிதித்துறை, நாள்.16.09.1994ன்படி இத்தகைய ஓய்வூதியர்களுக்கு தொகுப்புத் தொகை (Commutation) வழங்க இயலாது. நிதி இழப்பீடு எனக் கருதப்படும் தொகைக்கு ஈடான தொகையினை மட்டும் பிடித்தம் செய்து கொண்டு பணிக்கொடைத் தொகையினை வழங்கலாம்.

மனுதாரர்களில் ஒருவரான திரு.வெ.அடைக்கன் என்பவர் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் அன்னாருக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.200/– என்ற வீதத்தில் ஒருவருட காலத்திற்கு பிடித்தம் செய்ய அரசாணை எண்.383, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.16.08.2007ல் அரசால் இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது சாலை வெட்டுப்பணியில் ஈடுபட்ட நிகழ்வில் மனுதாரர்கள் ஓய்வு பெறும் வேளையில் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் ஏதுமில்லை.

<u>பொ.து.ந.க.எண்.ஈ1/41820/2007</u>

மனுதாரர்கள் நிபந்னைக்குட்பட்டு ஓய்வு பெற்றதால், மேற்படி மனுதாரர்களுக்கு தற்காலிக ஓய்வூதியமும், தற்காலிக பணிக்கொடை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. தொகுப்புத்தொகை வழங்கப்படவில்லை.

மேற்படி சாலைவெட்டு பணியில் பணியாற்றியுள்ள மனுதாரர்களுக்கு முன்பே பணியிலிருந்து ஓய்வு பெற்ற பொறியாளர்கள்திரு.என்.எஸ்.ரகுநாதன், திரு. டி.கே.கணேசன். திரு.வி.கிருஷ்ணமுர்த்தி, திரு. பி.முரஹரி, திரு.பசுல்லாகான் மற்றும் திரு.ஏ.ஆர்.ராமகிருஷ்ணன் ஆகியோருக்கு முழு ஓய்வூதியமும் இதர பணபயன்களும் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர்களுக்கு பின்பு பணியிலிருந்து ஓய்வு பெற்ற பொறியாளர் திரு.பி.டி.பிரபாகர் என்பவருக்கும் முழு ஓய்வூதியம் மற்றும் இதர பணப்பயன்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சூழ்நிலையில் மனுதாரர்கள் தங்களுக்கு முழு ஓய்வூதியமும், முழு, பணிக்கொடையும், ஓய்வுகால பிறப்பணப்பயன்களையும் அளிக்கக் கோரிக்கை விடுத்துள்ளதால், மனுதாரர்களின் கோரிக்கை குறித்து முடிவெடுக்க நியமனக்குழு மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘இப்பொருள் நியமனக் குழுவால் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டது. இந் நிகழ்வில் ஏற்கனவே முழு ஓய்வூதியம் வழங்கிய முன் நிகழ்வுகள் இருப்பதால் மனுதாரர்கள் (1) திரு. வி. அடைக்கன், செயற் பொறியாளர் (ஓய்வு) (2) திரு. வி. முரளி, செயற் பொறியாளர் (ஓய்வு) (3) திரு. இ.இ. சுந்தரமூர்த்தி, உதவி செயற் பொறியாளர் (ஓய்வு) (4) திரு. ஓ.ஏ. கோபாலகிருஷ்ணன், உதவி செயற் பொறியாளர் (ஓய்வு) (5) திரு. கா. ந. சண்முகசுந்தரம், உதவி செயற் பொறியாளர் (ஓய்வு) (6) திரு.சு. திருநாவுக்கரசு, உதவி செயற் பொறியாளர் (ஓய்வு) மற்றும் (7) திரு. ஆர். வெங்கட்ராமன், உதவி செயற் பொறியாளர் (ஓய்வு) ஆகியோருக்கு ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி ஆணைக்குட்பட்டும் ஒவ்வொருவரிடமும் உறுதிமொழிப் பத்திரம் பெற்றுக் கொண்டும், முழு ஓய்வூதியப் பயன்கள் வழங்க நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.சி1/7532/06

ஆணையாளர் அவர்களின் 05.10.2007 நாளிட்ட குறிப்பு

## 29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.549/2007 பொருள் எண்.67

### பணியமைப்பு– மருத்துவ அலுவலர் பணியிடம் நிரப்புதல்

13.02.2007 நாளிட்ட அரசாணையின்படி சுகாதாரத் துறையில் காலியாக உள்ள 31 மருத்துவ அலுவலர் காலிப் பணியிடங்களில் 2006–2007 ஆம் நிதி ஆண்டிற்கான 50 விழுக்காடு நிரப்புவதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 15 மருத்துவ அலுவலர் பணியிடங்களுக்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து 1:1 என்ற விகிதாச் சாரத்தில் பெயர் பட்டியல் பெறப்பட்டது. 4.6.2007 அன்று சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்கப்பட்டதில் 6 நபர்கள் மட்டும் வருகை புரிந்ததால் இந்த 6 நபர்களுக்கு நியமன ஆணை வழங்கப்பட்டது. இந்த 6 நபர்களில் 2 நபர்கள் பணியில் சேர விருப்பமில்லை என தெரிவித்தனர். மற்ற 4 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு தண்டையார் பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலையில் மீதமுள்ள 9 பணியிடங்களுக்கும் மேற்படி அரசாணையின்படி 2007–2008 ம் நிதி ஆண்டிற்கான 50 விழுக்காடு பணியிடங்கள் நிரப்ப வேண்டியுள்ளதால் 15 காலிப் பணிடங்களும் சேர்த்து மொத்த 24 மருத்துவ அலுவலர் காலிப்பணியிடங்களையும் ஆணையர் அவர்களின் 23.6.2007 நாளிட்ட உத்தரவின்படி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து 1:1 என்ற விகிதாச் சாரத்தில் புதிய நபர் பட்டியல் பெறப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு.

| Sl.No | Registration Number | Name and Address | Date of Birth Community | Communal Rotation No |
|---|---|---|---|---|
| 1 | Dependent Ex-Service 2006 F82 858 SF 21.12.2006 | A.CHUMUN BEE 13 Parasakthi Nagar, Ex-Service man Colony, I Cross St, Ch.73, kanchi Dt. | 24.2.1976 Scheduled Caste (Priority) | 16 |
| 2 | Ex-Service /EXIPKF 2005 M 03687 SF 7.3.2005 | J.NIRMAL KUMAR 5/22 Amman Koil St, Thathan Kuppam, Villuivakkam, Ch.49. | 16.01.1977 Scheduled Caste (Priority) | 26 |
| 3 | Inter Cast Marriage 2002 M0951 SF 7.5.2002 | P.ELANGO 66, Golden Jublee Apartments 208 Anna Main Road, K.K.Nagar, Ch.78 | 14.04.1959 Scheduled Caste(Priority) | 36 |
| 4 | 1996 F 11564 SF 27.12.1996 | P.R.AJESWARI 10 Subiksha Appartmets D.No.7 Atheryapuram, Ist St, Choolaimedy, Ch.94 | 1.8.1962 Scheduled Caste Non-Priority | 32 |
| 5 | 1997 M 00228 SF 09.01.1997 | S.DIWAKAR Plot No 26 Lakshmi Nagar Adambakkam, Ch.88 | 02.6.1978 Backward Class Non-Priority | 20 |
| 6 | 1997 M 01405 SF 25.12.1997 | D.SURESH KUMAR 12 P Raghavan Street, Perambur, Ch.11 | 08.08.1978 Backward Class Non-Priority | 24 |
| 7 | 1997 M 08589 SF 21.04.1997 | B.BHARAHITHARAN 11/111 North Street, Kenedy square, Perambur, Ch.11 | 08.11.1972 Back ward Class, Non-Priority | 28 |
| 8 | 1997 M 04222 SF 08.05.1997 | CHIRHARANJAN Q 65 Anna Nagar, Ch.40 | 04.11.1968 Backward Class Non-Priority | 34 |
| 9 | 1997M 05681 SF 30.6.1997 | M.MANIMARAN I II Main Road, kauthuri Bai Nagar, Adyar, Ch.20 | 08.04.1973 Back Ward Class Non-Priority | 38 |
| 10 | 1999 M 02043 SF 15.02.1999 | S.RAJANAND 50 Fourth Main Road,.Kottur Garden, Ch.85 | 28.2.1975 MBC & DNT Non-Priority | 17 |
| 11 | 1999 M 02877 SF 03.03.1999 | S.VIJAY 361/B Belly Area, Anna Nagar West Ch.40 | 28.2.1975 MBC &DNT Non-Priority | 27 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | 1999 M 04740<br>SF<br>20.4.1999 | L.KANNAN<br>Old.269 New 66, II Floor Admirality, Furtniture Royapettiah Ch.14 | 04.08.1974<br>MBC &DNT Non – Priority | 33 |
| 13 | 1999 F 04772<br>SF<br>09.06.1999 | K.ANITHA<br>C 866 II nd Street,<br>Periyar Nagar, Ch.82 | 25.09.1973<br>MBC & DNT<br>Non-priority | 37 |
| 14 | Ex-Servicemen/<br>EXIPKF<br>2005 M 03686<br>S.F<br>07.08.2005 | D.RAVISHANKAR<br>27/2 Kariappa Street, Purasaiwakkam,Ch.7 | 11.6.1974<br>Backward Class<br>General Priority | 21 |
| 15 | 2005 M 03688<br>SF<br>08.08.2005 | C.R.V.NARASIMHALU<br>131/1 Bharathi Colony, Thirumangalam, Ch.40 | 29.05.1972<br>Backward Class<br>General Turn Non-Priority | 31 |
| 16 | 1996 M 05705<br>SF<br>30.07.1996 | G.VELMURUGAN GANESH<br>8 Thiyagarajan Street, Vetri Nagar, Ch.82 | 10.7.1970<br>Scheduled Caste<br>General Turn Non-Priority | 19 |
| 17 | 1997 M 00332<br>SF<br>13.01.1997 | A.AMIRTHARAJ<br>No.14/1 Bharathi road, perambur, Ch.11 | 02.09.1959<br>Scheduled Caste<br>General Turn Non-Priority | 25 |
| 18 | 1997 M 10002<br>SF<br>04.09.1997 | R.DEV ANAND<br>11 Krishnappa Agraharam, George Town, Sowcorpet, Ch.79 | 06.08.1973<br>Backward Class<br>General Turn Non-Priority | 35 |
| 19 | 1985 M 9952<br>SF<br>06.12.1985 | N.SANTHOSH KUMAR<br>17 George Colony, Raghavan Street,<br>Sembium Ch.11 | 26.5.1958<br>Scheduled Caste<br>Non-Priority | 22 |
| 20 | 1997 F 02840<br>SF<br>08.04.1997 | N.SUDHA<br>Plot No.1987<br>5th Street 'II" Block Anna Nagar,<br>Ch.40 | 04.08.1973<br>Backward Class<br>Non-Priority | 18 |
| 21 | 1997 F 09778<br>SF<br>11.11.1997 | D.S.KARTHIKA SAILAKSHMI,<br>36 Govindan Street, Ayyavoo Colony, Aminjikarai, Ch.29 | 05.08.1972<br>Backward Class<br>Non-Priority | 30 |
| 22 | 1999 F 01899<br>SF<br>24.02.1999 | AMRITADANIEL<br>No.46 Aspiran Garden<br>Kilpauk, Chennai- 600 010. | 17.09.1972<br>MBC & DNT<br>Non-Priority | 23 |
| 23 | 1997 F 04863<br>SF<br>18.06.1997 | P.INDU<br>C/o T.S.Ramamurthy<br>2110/B 18th Main Road, Anna Nagar, Chennai 600 040 | 26.05.1972<br>Scheduled Caste<br>General Turn<br>Non-Priority | 29 |
| 24 | 1997 F 09168<br>SF<br>21.10.1997 | G.HEMAMALINI<br>538, 4th Cross Road, MKB Nagar,<br>Vysarpadi, Chennai 39 | 10.04.1970<br>Scheduled Caste<br>General Turn<br>Non-Priority | 39 |

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட மேற்கண்ட நபர் பட்டியலில் கண்டுள்ள மருத்துவர்களை சான்றிதழ் சரிபார்ப்புக்கு 10.8.2007 அன்று காலை 10.00 மணிக்கு ஆஜராகும்படி நபர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டது. இதில் 10.8.2007 அன்று சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 8 நபர்கள் மட்டுமே ஆஜரானார்கள். அதன் விவரம் பின் வருமாறு

| Sl.No | Registration Number | Name and Address | Date of Birth Community | Communal Rotation No |
|---|---|---|---|---|
| 1 | 1996 F 1564<br>SF<br>27.12.1996 | P.RAJESWARI<br>No.10.D.No.7 AthrayaPuram, Ist Street, Choolaimedu, Ch.94 | 01.03.1962<br>45 years | Scheduled Caste |

**சு.து.ந.க.எண்.சி1/7532/06**

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 1997 F09168<br>SF<br>21.10.1997 | G.HEMA MALINI<br>538 4 th Cross Road MKB Nagar<br>vyser padi Ch.39 | 10.4.1970<br>38 years | Scheduled Caste |
| 3 | 2006 F 32858<br>SF<br>21.12.2006 | A.CHUMUN BEE<br>13 Parashakthi Nagar<br>Ex-Service men Colony<br>First Cross, Ch. 73 kanchi Dt | 24.2.1976<br>32 years | Scheduled Caste |
| 4 | 2005 M03687<br>SF<br>7.3.2005 | J.NIRMAL KUMAR<br>5/22 Amman Koil Street<br>Thathan Kuppam,.<br>Villivakkam, Ch.49 | 16.01.1977<br>30 years | Scheduled Caste |
| 5 | 1997 M 00228<br>SF<br>09.01.1997 | S.DIWAKAR<br>Plot.No.26 II Street<br>lakshmi Nagar<br>Adambakkam ch.88 | 03.11.1972<br>34 years | Backward Class |
| 6 | 1997 M 03589<br>SF<br>21.4.1997 | B.BHARANITHARAN<br>No.11, 111 North Street, kennedy<br>Square perambur Ch.11 | 03.11.1972<br>34 years | Backward Class |
| 7 | 1997 M 00332<br>SF<br>13.01.1997 | A.AMIRTHA RAJ<br>No.14/1 Bharathi Road , Perambur<br>Ch.11 | 2.07.1959<br>49 years | Scheduled Caste |
| 8 | 1997 M 10002<br>SF<br>04.09.1997 | R.DEV ANAND<br>11, Krishnappa Agraharam Street,<br>Sowcorpet, George town, Chennai.79 | 06.08.1973<br>34 years | Backward Class |

மேற்படி சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 10.8.2007 அன்று ஆஜரான மருத்துவர்களில் திரு.ஜே.நிர்மல் குமார் மற்றும் திரு.பி.பரணிதரன் ஆகிய இரு நபர்கள் தற்போது மருத்துவ மேற்படிப்பு பயின்று வருவதாகவும் அவர்களது மேற்படிப்பு மார்ச்/ஏப்ரல் 2008 ஆம் ஆண்டில் முடிக்க உள்ளதாக தெரிவித்துள்ளனர். திரு.ஜே.நிர்மல் குமார் என்பவர் மருத்துவ மேற்படிப்பு படித்து வருவதால் மருத்துவ மேற்படிப்பு முடித்து பணியில் சேர 6 மாதங்கள் அவகாசம் கேட்டுள்ளார். மருத்துவ சேவையின் முக்கியத்தினை கருதி 6 மாத காலம் கடந்து பணியில் சேர்ப்பது குறித்து நிராகரிக்கலாம்.

மேலும், மேற்படி பட்டியலில் இடம் பெற்றுள்ள டாக்டர். திருமதி. ஹேமா மாலினி என்ற மருத்துவர் தற்போது மாவட்ட குடும்ப நலத்துறையில் தொகுப்பூதிய மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறார். இவருக்கு காலமுறை ஊதிய விகிதத்தில் பணிநியமனம் வழங்க சம்பந்தப்பட்ட துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இவரது பெயரினை தவிர்க்கலாம்.

மேலும் 10.8.2007 அன்று சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரான நபர்களின் சான்றிதழ்களை சரி பார்க்கப்பட்டதில் திருமதி.ராஜேஸ்வரி, மற்றும் திரு.அமிர்தராஜ் ஆகிய 2 நபர்கள் 35 வயதைக் கடந்துள்ளனர். பணி நியமன விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பினை கடந்துள்ளனர். இருப்பினும் அரசாணை எண்: 98 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்: 17.07.2006 ல் அரசு பணியாளர்களுக்கான வயது வரம்பினை கடந்தவர்களுக்கு மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு வயது தளர்வாணை வழங்கியுள்ளதால் வயது தளர்வாணை பெற தேவையில்லை.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சியில் வகுப்பு 2 ன் கீழ் வகைப்படுத்தப்ட்டுள்ளது. இப் பதவியினை நிரப்பிட மன்றத்தின் அனுமதி பெற்று அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பணி நியமனம் செய்யப்பட வேண்டும்.

சுகாதாரத் துறையில் போதிய மருத்துவர் இல்லாததால் மருந்தகங்களில் சிகிச்சைக்கு வரும் ஏழை எளிய மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். மேலும் தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனையில் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து 1:1 என்ற விகிதா சாரத்தில் பெறப்பட்ட இன சுழற்சி/ மூப்பு நிலை கொண்ட நபர் பட்டியலின் படி 10.8.2007 அன்று சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரான மருத்துவர்களுக்கு பணி நியமன உத்திரவு வழங்கலாம் எனக் கருதப்படுகிறது.

எனவே, சுகாதாரத் துறையில் காலியாக உள்ள மருத்துவ அலுவலர்கள் பணியிடத்தை காலமுறை ஊதிய விகிதம் ரூ.8000—275—13,500 என்ற ஊதிய அடிப்படையில் இதர படிகளுடன் குறிப்பிட்ட கல்வித் தகுதி பெற்று சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜராகி உள்ள நபர்களில் வரிசை எண்.2, 4, 6, தவிர மற்ற நபர்களை சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணைவிதி 85 (3) B ன் படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பணிநியமனம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ2/38651/07.**

**ஆணையரின் 22.10.2007 தேதியிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.550/2007 பொருள் எண்.68

**பணியமைப்பு – சுகாதார அலுவலர் பதவி உயர்வு**

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் சுகாதார அலுவலர் பணியிடம் 31.07.2000 முதல் காலியாகவுள்ளது.

சுகாதார அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 1ஏ என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியவை அரசின் வசம் உள்ளது.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணி விதிகள் 1998ன்படி சுகாதார அலுவலர் பதவிக்கான பணிநியமன விதிகள் பின்வருமாறு :–

| Class, Name of the Post and Scale of Pay | Mode of Appointment | Qualification |
|---|---|---|
| Class IA<br>Health Officer<br>14300-400-18300 | By Promotion from the cadre of Addl. Health Officer in Class 1B service | M.B.B.S. Degree with Diploma in Public Health.<br>A pass in Account Test for Executive Officers.<br>Must have served as Addl. Health Officer atleast for a period of one year. |

01.04.2007ஐ மைய நாளாகக்கொண்டு மேற்படி பணியிடத்தினை பதவி உயர்வு மூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.375/2007, நாள் 30.7.2007ஐ தொடர்ந்து, ஆணையரின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/31325/2007, நாள் 10.08.2007ன்படி உதவி சுகாதார அலுவலர் டாக்டர்.பெ. குகானந்தம் என்பவருக்கு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக கூடுதல் சுகாதார அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. இவர் 10.08.2007 அன்று கூடுதல் சுகாதார அலுவலராக பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிகழ்வுக்கு அரசின் உறுதியாக்கம் பெற அரசுக்கு 29.08.2007 தேதயிட்டு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு அரசாணை எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சி பொது சுகாதார மற்றும் மருத்துவ பணிவிதிகளின்படி, சுகாதார அலுவலர் பணியிடத்தினை பதவி உயர்வு மூலம் நிரப்ப கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் குறைந்தது ஓராண்டு காலம் பணிபுரிந்திருக்க வேண்டும். மேற்படி மைய நாளைக்கொண்டு சுகாதார அலுவலர் பதவியினை பதவி உயர்வு மூலம் நிரப்ப டாக்டர்.பெ. குகானந்தம், கூடுதல் சுகாதார அலுவலர் என்பவரது பெயர் பரிசீலிக்கப்பட்டது.

பணிவிதிகளின்படி டாக்டர்.பெ. குகானந்தம் என்பவர் கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் ஓராண்டு காலம் பணி நிறைவு செய்யாத போதிலும் பின்வரும் காரணங்களுக்காக அவரது பெயரினை பரிசீலிக்க வேண்டியுள்ளது :–

1) சென்னை மாநகராட்சியில் சுகாதார அலுவலர் பணியிடம் கடந்த 7 ஆண்டுகளாக பல்வேறு காரணங்களினால் நிரப்பப்படாமல் உள்ளது,

2) டாக்டர்.பெ. குகானந்தம் என்பவர் பணிமூப்பு பெற்று, கடந்த கால பணி மற்றும் அனுபவத்தினை கருத வேண்டியுள்ளது.

3) மேலும், இவர் கடந்த 02.09.2006 முதல் சுகாதார அலுவலர் பணியிடத்தினை பொறுப்பு அலுவலராக சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்.

4) சென்னை மாநகரில் பெருகி வரும் மக்கள் தொகையில், பொருளாதார மற்றும் நலிவுற்ற மக்களுக்கு சுகாதார பணியினை விரிவுப்படுத்தி அன்றாட மருத்துவ சேவைகளை நிறைவேற்றிட சுகாதார அலுவலர் பதவியினை உடனடியாக நிரப்ப வேண்டியுள்ளது.

<u>பொ.து.ந.க.எண்.ஈ2/38651/07.</u>

கூடுதல் சுகாதார அலுவலர் டாக்டர்.பெ. குகானந்தம் என்பவர் மேற்படி பணிவிதிகளின்படி இதர கல்வி தகுதிகள் பெற்றுள்ள நிலையில், இவருடைய அனுபவத்தினை கருத்தில் கொண்டு கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் ஓராண்டு காலம் பணி நிறைவு செய்ய வேண்டும் என்ற விதிமுறையிலிருந்து இவருக்கு மட்டும் தளர்வு செய்ய அரசுக்கு பரிந்துரைக்கலாம்.

எனவே, (அ) சுகாதார அலுவலர் பதவிக்கான 01.04.2007ஐ மைய நாளாகக்கொண்டு அவசர அவசியம் கருதி, கூடுதல் சுகாதார அலுவலர் டாக்டர்.பெ. குகானந்தம் என்பவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்த்து தயாரிப்பதற்கு அனுமதியும்,

(ஆ) சுகாதார அலுவலர் பதவிக்கு பணிவிதிகளின்படி கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் குறைந்தது ஓராண்டு காலம் பணிபுரிய வேண்டும் என்ற விதிமுறையிலிருந்து டாக்டர்.பெ. குகானந்தம் என்பவருக்கு மட்டும் தளர்வு செய்து, இவரது பெயரைக்கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து பணி நியமனம் வழங்கக் கோரி, அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ2/16651=A/07.**

**ஆணையாளர் அவர்களின் 14.09.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.551/2007 பொருள் எண்.69

**பணியமைப்பு – உதவி வருவாய் அலுவலர் தெரிவுப் பட்டியலில் பெயர் சேர்த்தல்**

31.08.2007 அன்று நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு தீர்மான எண்.457/07ல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இப்பொருள் குறித்து மன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து அடுத்து வரும் நியமனக்குழுவில் விவாதித்து தகுந்த முடிவு எடுக்கப்படும் என்று வணக்கத்தற்குரிய மேயர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான வரையறுக்கப்பட்ட பணிவிதிகள் :

| **Class, Category No.& Post** | | Method of Appointment | Qualification |
|---|---|---|---|
| **1.** | Class - II<br><br>Assistant Revenue Officer | (a) By promotion | (i) A Graduate of a recognized University ;<br>(ii) Must be an approved probationer in the category of Supeintendents of Taxes or must have served as Assessor for a period of not less than five years ;<br>(iii) A pass in the Account Test for subordinate Officers Parts I and II or any other Accounts Test prescribed by Government or thereto ; and<br>(iv) A pass in the Revenue Test Parts I & II prescribed for the Madras Revenue Subordinate Services. |

2007=2008ம் ஆண்டுக்கு 15.05.2007ஐ மைய நாளாகக்கொண்டு உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலுக்கு பின்வரும் வரிமதிப் பீட்டாளர்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

| வ. எண். | வரிமதிப்–பீட்டாளர் களின் பெயர் (திருவாளர்கள் | கோரிக்கை விவரம் | குறிப்பு | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1 | ஆர்.தண்ட பாணி | உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான அனைத்து தகுதிகள் பெற்றுள்ளதால் தெரிவுபட்டியலில் இவரது பெயரினை சேர்க்க கோரப்பட்டுள்ளது. | இவர் வரையறுக்கப் பட்டுள்ள பணிவிதிகளின்படி அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதால் இவரது பெயரினை உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். | இவர் வருவாய் தேர்வு பாகம்=3ல்மைய நாளுக்கு பின்பு தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார். வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி உ.வ.அ. பதவி உயர்வுக்கு வருவாய் தேர்வு பாகம்=3ல் தேர்ச்சி பெற தேவையில்லை. மன்றத் தீர்மான எண்.457/07ல் 14 நபர்களுக்கான தெரிவுப்பட்டியலில் இவரது பெயரினை பணிமூப்பின்படி வ.எண்.1A என்று நிர்ண யிக்கலாம். |

<u>பொ.து.ந.க.எண்.ஈ2/16651=A/07.</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | ஜே. முரளிதர் | உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான அனைத்து தகுதிகள் பெற்றுள்ளதால் தெரிவுபட்டியலில் இவரது பெயரினை சேர்க்க கோரப்பட்டுள்ளது. | இவர் வரையறுக்கப் பட்டுள்ள பணிவிதிகளின்படி வருவாய் தேர்வு பாகம்=2ல் தேர்ச்சி பெறவில்லை. மைய நாளுக்கு பின்பு 29.05.2007 அன்று தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார். | அரசு குறிப்பாணை எண்.3927/70, பொதுப்பணி=அ துறை, நாள் 18.08.70ன்படி குறிப்பிட்ட கல்வி தகுதிகள் அனைத்தும் மைய நாளுக்கு முன்பே தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். மேற்படி அரசு குறிப்பாணையின்படி இவரது கோரிக்கையினை பரிசீலிக்க இயலாது. |
| 3 | ஜி. கங்கமுத்து | உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுபட்டியலில் இவரது பெயரினை சேர்க்க கோரப்பட்டுள்ளது. | இவர் வரையறுக்கப் பட்டுள்ள பணிவிதிகளின்படி சார் நிலை கணக்கு அலுவலர்களுக்= கான பாகம்=2 மற்றும் வருவாய் தேர்வு பாகம்=1ல் தேர்ச்சி பெறவில்லை. | வரையறுக்கப்பட்ட பணிவிதிகளின்படி முழு தகுதிகள் பெறாததால், இவரது கோரிக்கை பரிசீலிக்க இயலாது. |
| 4 | கே.ஜி. நரசிம்மன் | உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுபட்டியலில் இவரது பெயரினை சேர்க்க கோரப்பட்டுள்ளது. | இவர் வரையறுக்கப் பட்டுள்ள பணிவிதிகளின்படி வருவாய் தேர்வு பாகம்=1 முதல் தாள் தேர்ச்சி பெறவதிலிருந்து விலக்களிக்க அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப் பட்டுள்ளது. அரசாணை வரப்பெறவில்லை. | அரசாணை எண்.221, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள் 10.05.90ன் படி உரிய துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து தளர்வாணை தொடர்பாகஅரசாணை வழங்கப்படும் தேதியிலிருந்து மட்டுமே தனியரின் கோரிக்கை ஏற்க இயலும். எனவே, தற்போது வரையறுக்கப்பட்ட பணிவிதிகளின்படி முழு தகுதிகள் பெறாததால், இவரது கோரிக்கை பரிசீலிக்க இயலாது. |
| 5 | ஜி. கிருஷ்ண மூர்த்தி | உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுபட்டியலில் இவரது பெயரினை சேர்க்க கோரப்பட்டுள்ளது. | இவர் வரையறுக்கப் பட்டுள்ள பணிவிதிகளின்படி வருவாய் தேர்வு பாகம்=2ல் தேர்ச்சி பெறவில்லை. மைய நாளுக்கு பின்பு 29.05.2007 அன்று தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார். | அரசு குறிப்பாணை எண்.3927/70, பொதுப்பணி=அ துறை, நாள் 18.08.70ன்படி குறிப்பிட்ட கல்வி தகுதிகள் அனைத்தும் மைய நாளுக்கு முன்பே தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். மேற்படி அரசு குறிப்பாணையின்படி இவரது கோரிக்கையினை பரிசீலிக்க இயலாது. |

பொ.து.ந.க.எண்.ஈ2/16651=A/07.

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | எஸ். தண்ட பாணி | உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுபட்டியலில் இவரது பெயரினை சேர்க்க கோரப்பட்டுள்ளது. | இவர் வரையறுக்கப் பட்டுள்ள பணிவிதிகளின்படி வருவாய் தேர்வு பாகம்=1 மற்றும் பாகம்=2ல் தேர்ச்சி பெறவில்லை. | வரையறுக்கப்பட்ட பணிவிதிகளின்படி முழு தகுதிகள் பெறாததால், இவரது கோரிக்கை பரிசீலிக்க இயலாது. |
| 7 | கே. பெத்த பாத்துருடு | உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுபட்டியலில் இவரது பெயரினை சேர்க்க கோரப்பட்டுள்ளது. | இவர் வரையறுக்கப் பட்டுள்ள பணிவிதிகளின்படி வருவாய் தேர்வு பாகம்=1, பாகம்=2 மற்றும் பாகம்=3ல் தேர்ச்சி பெறவில்லை. | வரையறுக்கப்பட்ட பணிவிதிகளின்படி முழு தகுதிகள் பெறாததால், இவரது கோரிக்கை பரிசீலிக்க இயலாது. |
| 8 | ஈ. டில்லிபாபு | உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுபட்டியலில் இவரது பெயரினை சேர்க்க கோரப்பட்டுள்ளது. | இவர் வரையறுக்கப் பட்டுள்ள பணிவிதிகளின்படி வருவாய் தேர்வு பாகம்=1 முதல் தாளில் தேர்ச்சி பெறவில்லை. மைய நாளுக்கு பின்பு 28.05.2007 அன்று தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார். | அரசு குறிப்பாணை எண்.3927/70, பொதுப்பணி=அ துறை, நாள் 18.08.70ன்படி குறிப்பிட்ட கல்வி தகுதிகள் அனைத்தும் மைய நாளுக்கு முன்பே தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும். மேற்படி அரசு குறிப்பாணையின்படி இவரது கோரிக்கையினை பரிசீலிக்க இயலாது. |

மன்றத் தீர்மான எண்.457/2007, நாள் 31.08.2007ல் உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதால்,

(1) மேற்படி வ.எண்.1ல் இடம் பெற்றுள்ள திரு.ஆர். தண்டபாணி என்பவரை மட்டும் இவரது பணிமூப்பினை கருதி மன்றத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப் பட்டியலில் வ.எண்.1=A என்று நிர்ணயித்து திருத்திய தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டியும்,

(2) மைய நாளுக்கு பின்பு உரிய தேர்வில் தேர்ச்சி பெற்ற மேற்படி பட்டியலில் வ.எண்.2,5 மற்றும் 8 இடம் பெற்றுள்ள திருவாளர்கள்.ஜே. முரளிதர், ஜி. கிஷ்ணமூர்த்தி மற்றும் ஈ. டில்லிபாபு ஆகியோரது கோரிக்கை குறித்து நியமனக்குழுவில் உரிய முடிவு எடுப்பதற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘மேலே இனம் 1க்கு பரிந்துரைத்தும், இனம்–2ல் உள்ளவர்கள் உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு தெரிவுப் பட்டியல் தயாரிக்க நிர்ணயிக்கப்பட்ட மைய நாளுக்குள், விதிகளின்படி முழுத் தகுதி பெறாததால் இவர்களது பதவி உயர்வு கோரிக்கையை பரிசீலிக்க இயலாது என்றும் நியமனக்குழு தீர்மானித்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

**மா.கு.ந. (ம) ம.கு.ந. எண். எப் 4 /02802 / 2007**

**ஆணையரின் 24.10.2007 நாளிட்ட குறிப்பு**

**29.10.2007 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.552/2007 பொருள் எண்.70

**பணியமைப்பு – மருத்துவ அலுவலர் காலிபணியிடங்கள் நிரப்புதல்**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் தற்பொழுது மருத்துவ அலுவலர் பதவிக்கான 35 பணியிடங்கள் காலியாக உள்ளது.

இப்பதவியினை வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி(அரசாணை எண்161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.8.98) நேரடி நியமனம் மூலம் நிரப்ப வேண்டும். அதன் விவரம் பின்வருமாறு.

| வகுப்பு | பதவியின் பெயர் | கால முறை ஊதிய விகிதம் | நியமனமுறை | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 2 | மருத்துவ அலுவலர்/உதவி அறுவையாளர் | ரூ8000–275–13500 | நேரடி நியமனம் வயது 35 க்குட் பட்டவராக இருக்க வேண்டும் | பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட மருத்துவ மற்றும் அறுவைசிகிச்சையில் பட்டம்(MBBS) மகப்பேற்றில் பட்டமேற்படிப்பு பட்டம் அல்லது பட்டயம் விரும்பத்தக்கது. |

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919–85 (3)(b)ன்படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பணி நியமனம் செய்ய மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

அரசாணை எண் 65 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை 30.3.2007ன்படி வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்படும் பட்டியலிலிருந்து 1 : 1 என்ற விகிதாச்சார அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட வேண்டும்.

அரசாணை எண் 98 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 17.7.2006ன்படி பணி நியமனத்திற்கு வயது வரம்பினை மேலும் ஐந்தாண்டு காலத்திற்கு நீட்டித்து தளர்வாணை வழங்கியுள்ளது.

மேற்படி பணி விதிகள் மற்றும் அரசாணைகளின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதி வாய்ந்த நபர் பட்டியல் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:–

| வ.எண் | மருத்துவர் பெயர் மற்றும் பதிவு எண் | இனம் | படிப்பு | தேர்ந்தெடுக்க பட்டவர்கள் | தற்போது வயது |
|---|---|---|---|---|---|
| 01. | டாக்டர் பி.ராஜேஸ்வரி 1996F11564SF 27/12/96 | SC | MBBS | ஆம் | 45 |
| 02. | டாக்டர் கீதா 1996F 06808 SF 18.9.96 | MBC | MBBS | ஆம் | 34 |
| 03. | டாக்டர் சி.எச் விஜயா 1997FO 1076SF 24/2/97 | BC | MBBS | ஆம் | 44 |
| 04. | டாக்டர் மணிமேகலை 1999F 14221 SF 2.12.99 | SC | MBBS | ஆம் | 50 |
| 05. | டாக்டர் பிரேமலதா 2000F 3265/2000 நாள் 6.4.2000 | MBC | MBBS DGO | ஆம் | 30 |
| 06. | டாக்டர் சமீரா தபாசம் 1999F 0176 SF 17.2.99 | BC | MBBS | ஆம் | 33 |

மேற்படி பட்டியலில் வரிசை எண் 1ல் உள்ள டாக்டர் பி.ராஜேஸ்வரி என்பவர் சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறையில் மருத்துவ அலுவலர் பதவிக்கு பணி நியமனம் செய்ய மன்றத்திற்கு ஏற்கனவே முன்மொழிவு செய்யப்பட்டுள்ளதால் இவரது பெயரினை தவிர்க்க வேண்டியுள்ளது.

**மா.கு.ந. (ம) ம.கு.ந. எண். எப் 4 /02802 / 2007**

மேற்படி பட்டியலில் வரிசை எண் 3 மற்றும் வரிசை எண் 4ல் உள்ள நபர்கள் முறையே டாக்டர் சி.எச்.விஜயா மற்றும் டாக்டர் பி.ஜி மணிமேகலை ஆகியோர் வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி 35 வயது கடந்துள்ள போதிலும் தமிழ்நாடு அரசு மாநில மற்றும் சார் நிலை பணியாளர் பொது விதி 12 (d)(ii) ன்படி இவர்களுக்கு வயது வரம்பு பொருந்தாது.

மேற்படி பட்டியலில் வ.எண் 6ல் உள்ள டாக்டர் சமீரா தபாசம் என்பவர் தற்பொழுது சௌதி அரேபியாவில் வசித்து வருவதாலும் ஒரு மாத காலத்திற்குள் சென்னைக்கு திரும்புவதாக தெரிவித்து இவருடைய சான்றிதழ்களை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரான இவரது உறவினர் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு மாநில மற்றும் சார்நிலை பணியாளர் பொது விதி 4(C)ல் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட நபர்கள் 3 மாத கால அவகாசம் கொடுக்கலாம் என்று வழிவகை செய்யப்பட்டுள்ளதால் டாக்டர் சமீரா தபாசம் என்பவரது பெயரினை பரிசீலிக்க வேண்டியுள்ளது.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் மருத்துவ அலுவலர் பதவிக்கான பெறப்பட்ட பணி மூப்பு/இன சுழற்சி திருத்தப்பட்ட பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

| வ. எண் | மருத்துவர் பெயர் மற்றும் பதிவு எண் | இனம் | படிப்பு | தாய் மொழி தமிழ் /தமிழ் மொழி கல்வி தேர்ச்சி விவரம் | தற்போது வயது | தேர்ந்தெடுக்க பட்டவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01. | டாக்டர் கீதா 1996F 06808 SF 18.9.96 | MBC | MBBS | தாய் மொழி தமிழ்/ தமிழ் மொழி தேர்ச்சி | 34 | ஆம் |
| 02. | டாக்டர் சி.எச் விஜயா 1997FO 1076SF 24/2/97 | BC | MBBS | தாய் மொழி தமிழ்/ தமிழ் மொழி தேர்ச்சி | 44 | ஆம் |
| 03. | டாக்டர் மணிமேகலை 1999F 14221 SF 2.12.99 | SC | MBBS | தாய் மொழி தமிழ்/ தமிழ் மொழி தேர்ச்சி | 50 | ஆம் |
| 04. | டாக்டர் பிரேமலதா 2000F 3265/2000 நாள் 6.4.2000 | MBC | MBBS DGO | தாய் மொழி தமிழ்/ தமிழ் மொழி தேர்ச்சி | 30 | ஆம் |
| 05. | டாக்டர் சமீரா தபாசம் 1999F 0176 SF 17.2.99 | BC | MBBS | தாய் மொழி தமிழ்/ தமிழ் மொழி தேர்ச்சி | 33 | ஆம் |

எனவே சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் தற்போது காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பதவிக்கான காலிப் பணியிடங்களில் மேற்படி திருத்தப்பட்ட பட்டியலில் இடம்பெற்றுள்ள ஐந்து நபர்களை கொண்டு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக மருத்துவ அலுவலராக ரூ 8000–275–13500 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணி நியமனம் செய்யவும் மற்றும் பணி விதிகளின்படி தமிழ் நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி மற்றும் மருத்துவ தொகுப்பில் தேர்ச்சி பெறவேண்டும் என்பதனை தெரிவித்து நிபந்தனையுடன் பணி நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி நியமனகுழுவின் ஒப்புதல் சுற்றின் மூலம் வேண்டப்படுகிறது.

"இம்மாத நியமனக்குழு கூட்டம் 22.10.2007 அன்று முடிவுற்ற நிலையில் இதனை நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்